# மாலை தீப்பொறி

MALAE THEEPORI


4th All India Conference
All India Construction Workers Federation
AICCTU AICWF
Kanyakumari - Tamilnadu
8th & 9th July 2023


2023 ஜூன் 16-30 தொகுதி 21 இதழ் 21

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


# வேர்களிடம் செல்வோம்! வேரூன்றுவோம்!!







## தோழர் பானி பட்டாச்சார்யா அவர்களுக்கு புகழஞ்சலி!



தோழர் பானி பட்டாச்சார்யா, 91 வயதில் ஜுன் 5, 2023 அன்று கொல்கத்தாவில் உள்ள தனது சுபஸ்கிராம் இல்லத்தில் காலமானார். அடுத்தடுத்த கோவிட் 19 தொற்றுநோய் அலைகளில் அவர் பாதுகாப்பாகவும் உடல் நலத்துடனும் இருந்தார். ஆனால், சமீப காலங்களில் முதுமை அவரை ஆட்கொள்ளத் துவங்கியது. அவர் தோழர் திபங்கரின் தாயாராவார்.

முன்னர் கிழக்கு வங்காளமாகவும் இப்போது வங்கதேசத்திலும் உள்ள போகுரா மாவட்டத்தில் பிறந்த தோழர் பானி பட்டாச்சார்யாவின் ஆரம்ப கால வாழ்க்கை 1940களின் கொந்தளிப்பான காலகட்டத்தால் இடையூறுகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. அப்போது அவர் குடும்பம் போகுராவின் துப்சாசியாவிலிருந்து தினாஜ்பூருக்கு (இப்போது மேற்கு வங்கத்தின் தெற்கு தினாஜ்பூர் மாவட்ட தலைமையிடம்) குடிபெயர்ந்திருந்தது. நாட்டில் நீதி, சுதந்திரம், சமத்துவத்திற்கான இகக(மாலெ) கட்சியால் தலைமை தாங்க பட்ட கம்யூனிச இயக்கத்தின் பால் அவர் ஈர்க்கப்பட்டார். அவர் தன்னை கட்சியின் உறுப்பினராகவும் பதிவு செய்து கொண்டார்.

தோழர் பானி பட்டாச்சாரியாவுக்கு நமது புரட்சிகர புகழஞ்சலியை உரித்தாக்குகிறோம். செவ்வணக்கம்!

மேற்கு வங்கத்தில் 18.6.2023 அன்று நடைபெற்ற புகழஞ்சலிக் கூட்டத்தில் இகக(மாலெ) பொதுச் செயலாளர் திபங்கர் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். ❑

## தோழர் காளிமுத்து அவர்களுக்கு செவ்வஞ்சலி!



புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தாலுக்கா, நம்புரான்பட்டியைச் சேர்ந்த இகக(மாலெ) கட்சியின் ஒன்றிய குழு உறுப்பினர், அனைத்திந்திய விவசாய கிராமபுற தொழிலாளர் சங்கத்தின் ஒன்றிய துணைத் தலைவர் தோழர் மு. காளிமுத்து அவர்கள் 08.06.2023 அன்று உடல்நலக் குறைவினால் இயற்கை எய்தினார். அதிமுக கட்சியில் இருந்த தோழரின் குடும்பம் கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு சிபிஐஎம்எல் கட்சியில் இணைந்து செயல்பட துவங்கினார்கள். தோழர் காளிமுத்து, அவரது தாய், அவரது இணையர், மூன்று மகன்கள், மருமகள்கள், தோழர் காளிமுத்துவின் ஐந்து சகோதரர்கள், அவர்களது இணையர்கள், அந்த ஐவரின் பிள்ளைகள் மற்றும் காளிமுத்து அவர்களின் பேரக்குழந்தைகள் என அவரது குடும்பத்தில் மட்டும் 25 பேர் எம்எல் கட்சி உறுப்பினர்கள். தோழரின் வீட்டில் தான் கிளைக் கூட்டம் நடைபெறும். கூட்டம் நடைபெறும் அன்று அவரது வீட்டில் பெரிய விருந்தே நடக்கும். தேர்தல் நிதி அல்லது போராட்ட நிதி வசூல் நடந்தால் அவரது வீட்டில் இருந்து தான் வசூல் ஆரம்பிக்கும். குடும்பத்தில் உள்ள அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு ஆயிரம், ஐநூறு என வழங்குவார்கள். போராட்டங்களுக்கு பேரக்குழந்தைகளையும் அழைத்து கொண்டு குடும்பத்துடன் கலந்து கொள்வார். உடல் நலக் குறைவு ஏற்பட்டபின்னர் கூட்டங்களுக்கு வரவேண்டாம் என்று சொன்னாலும் கேட்க மாட்டார்.

தான் அதிகமாக கட்சி வேலைகளில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாததால் தனது மூத்த மகன் புண்ணியமூர்த்தி அவர்களை கட்சி வேலைகளில் அதிகம் ஈடுபட வைத்தவர். கம்யூனிஸ்ட் கட்சி காளிமுத்து போன்ற மன உறுதிமிக்க தோழர்களின் உழைப்பாலும் தியாகத்தாலும் இன்னும் உயிர்ப்போடு செயல் படுகிறது. தோழரின் புரட்சிகர உணர்வுகளை நெஞ்சில் ஏந்துவோம்.!

அவர் விட்டுச் சென்ற மக்கள் பணிகளை தொடர உறுதியேற்போம்! ❑

2023 ஜூன் 16-30

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 21

## உள்ளே

| | |
|---|---|
| வேர்களிடம் செல்வோம் | 4 |
| வெகுமக்களிடம் செல்வோம் | 8 |
| கல்லறையாக மாறும் ரயில் | 10 |
| கட்டுமான சம்மேளன அகில இந்திய மாநாடு | 13 |
| சாராய வழக்கு சிறை மரணம் | 19 |

**ஆசிரியர்**
**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**
**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**
**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம்,
சென்னை – 600023

நிர்வாக அலுவலகம்

3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741
malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com



தலையங்கம்

# மக்கள் விரோத காக்கிகள் தண்டனையில் இருந்து தப்பிவிடக் கூடாது

*காவல்துறையில் தன்னுடன் பணிபுரிந்த சக பெண் அதிகாரியிடம் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டவர் முன்னாள் காவல்துறை சிறப்புத் தலைவர் ராஜேஷ்தாஸ். அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அவருக்கு உதவி செய்த காவல் அதிகாரி கண்ணனுக்கு 500 ரூபாய் அபராதமும் விதித்து விழுப்புரம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதில் இப்படி ஒரு தீர்ப்பு வருவதற்கு பாதிக்கப்பட்டவர் உயர் பதவியில் இருந்த அதிகாரி என்பது கூட ஒரு காரணம் ஆகும். இல்லையென்றால், சாட்சி சொல்ல விடாமலேயே தங்கள் அதிகார பலத்தைக் காட்டியிருப்பார்கள். பாலியல் குற்றச்சாட்டுகளில் மாட்டுகிற பலரும் மக்கள் விரோதிகளாகவே இருக்கிறார்கள். இந்த ராஜேஷ்தாஸ் அதிகாரியாக இருந்த காலங்களில் பல மக்கள் போராட்டங்களை ஒடுக்கியவர். மக்கள் மீது தடியடித் தாக்குதல்களை நடத்தியவர். இவர் தென் மண்டல காவல் துறைத் தவைராக இருந்தபோதுதான் நெல்லை மாவட்டம் இடிந்தகரையில் கூடங்குளம் அணுஉலைக்கு எதிராகப் போராடிய மக்கள் மீது காவல்துறையை ஏவிவிட்டுத் தாக்குதல் நடத்தியவர். முல்லைப் பெரியாறு பிரச்சனையின் போது விவசாயிகளை மிரட்டியவர். இமானுவேல் சேகரன் நினைவு நாளில் பரமகுடியில் துப்பாக்கிசூடு நடத்தி பலர் உயிரிழக்கக் காரணமானவர். ராஜேஷ்தாஸ் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு கூடுதல் காவல்துறை தலைமை இயக்குநராகப் பணிபுரிந்த போதுதான் டாஸ்மாக் மதுபானங்கள் தனியாருக்கு கைமாற்றப்பட்டு பல நூறு கோடி ரூபாய் ஊழல் நடந்தது. இப்படிப்பட்டவர்தான் இன்று பாலியல் குற்றச்சாட்டு புகாரில் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளார். இவருடைய அதிகாரம் கொடி கட்டிப் பறந்தது பெரும்பாலும் அதிமுக ஆட்சிகாலம். இவரது துணைவியார் பீலா ராஜேஷ் சுகாதாரத் துறைச் செயலாளராக இருந்தவர். இவர் உண்மையிலேயே அவர் நடத்திய மக்கள் விரோத செயல்களுக்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர். ஆனால், காவல்துறையில் மட்டுமல்ல, பல்வேறு அரசுத் துறையில் உள்ள இம்மாதிரியான மக்கள் விரோதிகள் அவர்களின் மக்கள் விரோதச் செயல்களுக்காகத் தண்டிக்கப்படுவதேயில்லை. விதிவிலக்குகளாக வாச்சாத்தி போன்ற வழக்குகளில் காவல்துறை அதிகாரிகள் தண்டிக்கப் பட்டார்கள். தந்தை, மகன் இருவரையும் கொன்ற சாத்தான்குளம் வழக்கில் இருந்து குற்றவாளிகளான காவல்துறை அதிகாரிகள் தப்பிக்கவே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அம்பாசமுத்திரம் பல் பிடுங்கி பல்வீர் சிங் இன்னும் கைது செய்யப்படவேயில்லை. தூத்துக்குடி ஸ்டெர்லைட் எதிர்ப்புப் போராளிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேரைக் கொன்றவர்கள் மீது, நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் குற்றவாளிகள் என்று கூறிவிட்ட பின்னரும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இழுத்தடிக்கப்படுகிறது. இப்போது புளியங்குடி தங்கசாமி பாளை சிறையில் மர்மமாக மரணம் அடைந்துள்ளார். இதற்குக் காரணமான காவல்துறை அதிகாரிகளைத் தப்பிக்கச் செய்யவே அரசு எந்திரம் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. பல சமயங்களில் காவல்துறையினரின் அடாவடி, அராஜகச் செயல்கள், அத்துமீறல்கள் வெளியே வராமலேயே போய்விடுகின்றன. யார் மீதும் வழக்குப் போடும் அதிகாரம் தங்கள் கையில் உள்ளது என்பதால் எவரையும் அடிப்பதும் சித்தரவதை செய்வதும் கொல்வதும் தங்கள் உரிமை என்பதுபோல் நடந்து கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் விரோதிகள் தப்பித்துக் கொள்ள இடம் அளிக்கக்கூடாது.* ❑

# வேர்களிடம் செல்வோம்! வேரூன்றுவோம்!

**சங்கர் வீ**

*பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தை கூர்மைப் படுத்திட வேண்டுமானால், கட்சிக் கிளைகளை, ஊராட்சிக் (உள்ளூர்) கமிட்டிகளை பலப்படுத்திட வேண்டும் என கட்சி மத்திய கமிட்டி அறைகூவல் அறைகூவல் விடுத்து இருக்கிறது. மே 25, நக்சல்பாரி நினைவு நாள் முதல் ஜூலை 28 வரை அதை சடங்குத் தனமாக அல்ல. ஒரு பெரும் இயக்கமாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி இருக்கிறது. ஜூலை 28, தியாகிகள் நினைவு நாளன்று அனைத்து கிளைகளும், கிளை உறுப்பினர்களும் கூடி, பாசிசத்தை வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்திட, கட்சிக் கிளைகளை வலுப்படுத்திட சபதம் ஏற்றிட வேண்டும் என திட்டமிட்டு வருகிறது.*

*ஜூலை 28 வரை என்னென்ன செய்தோம், எத்தனை கிளைகளைக் கூட்டினோம், எத்தனை புதிய கிளைகளை உருவாக்கினோம், கிளைகளை செயலூக்கப்படுத்திட என்னென்ன திட்டங்கள் வகுத்தோம் என்பதை ஒரு அறிக்கையாகவும் வழங்கிட கோரி இருக்கிறது.*

*அதனால்தான், இதை ஒரு இயக்கமாக மாற்றிடும் விதத்தில் நமது விவசாய கிராமப்புற தொழிலாளர் பரப்புரை இயக்க பயணத்தைக் கூட கிராமங்களுக்கு, ஊராட்சிகளுக்கு, வேர்க்கால் மட்டத்திற்கு சென்றிடும் விதத்தில் அதனை மாவட்ட வாரியானதாக மாற்றி அமைத்திருக்கிறோம்.*

**கார்ப்பரேட் மயமாக்கத்திற்கு எதிராக உழைக்கும் மக்கள் அரசியலை வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய பிரச்சனையாக மாற்றிடுவது மட்டுமல்ல, மோடியின் காவிப் பாசிச, கார்ப்பரேட் ஆட்சியை, மனுஅநீதி ஆட்சியைத் தூக்கியெறிந்திட சபதம் ஏற்றிட வேண்டும். அத்தகைய ஒரு அரசியல் பார்வையை மையமாக கொண்டுதான் வேர்க்கால் மட்ட கட்சி அமைப்புகளை செயலூக்கப்படுத்தும் கடமையை முன்னெடுத்து இருக்கிறோம்.**

*மாவட்டவாரியாக பயணம் என்பதை முக்கிய மையங்களில் கூட்டங்கள் நடத்துவதாக மட்டுமே திட்டமிடுவோம் என்றால் நமது நோக்கம் தோல்வி அடைந்து விடும். மாறாக, கிளைகள்வாரியாக, ஊராட்சிவாரியாக சென்று, ஊராட்சிக்கு 500 கையெழுத்துக்கள், ஊராட்சிக்கு 500 உறுப்பினர்கள், ஊராட்சிக்கு 10 தீப்பொறி சந்தா, ஊராட்சிக்கு ரூ 1000 மாநில நிதி, ஊராட்சிக்கு 100 பேரை ஒன்றிய போராட்டத்துக்கு அணிதிரட்டுவது என்பதை முழக்கமாக்கி, அதனை அடைந்திட வேண்டும்.*

*பெரும்பான்மை மக்கள் ஆதரவு பெற்ற சிவப்பு ஊராட்சிகளை உருவாக்குவதும் கூட இந்த கிளைகளை, ஊராட்சிகளை, வேர்களை வலுப்படுத்தும் இயக்கத்தின் நோக்கமாக இருக்கும்.*

### கிளைகளைப் புத்துயிர் பெற செய்வோம்!

*கட்சிக் கிளைகள் என்பது பற்றிக் கவலை இல்லாமலே, மாவட்ட மட்டத்தில் இருக்கும் ஊழியர்கள், செயல்வீரர்களே அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுவது என்பதற்குப் பழகிப் போயிருக்கிறோம்.*

*கிளைகளும் ஊராட்சிக் கமிட்டிகளும், நகர்ப்புற பகுதிக் கமிட்டிகளும்தான் கட்சியின் அடிப்படை அமைப்புகள் ஆகும். கட்சிக்கும் மக்களுக்கும் இடையிலான இணைப்புப் பாலங்கள் ஆகும். புரட்சிகர அரசியலை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான கருவிகள் ஆகும்.*

இன்னும் சொல்லப் போனால், கட்சிக் கிளைகளும், விவசாயத் தொழிலாளர் கிராமப்புறத் தொழிலாளர்களின் ஊராட்சிக் கமிட்டிகளும், தொழிலாளர்களின் தொழிலாளர் கவுன்சில்களும் ஒரு புரட்சிகர சூழலில், மாற்று அதிகார மையங்களாக எழும் ஆற்றல் படைத்தவை ஆகும். எனவே, அவற்றுக்கு உரிய முக்கியத்துவம் கொடுப்பது என்பதுதான் கிளைகளை வலுப்படுத்தும் இயக்கத்தின் நோக்கம் ஆகும்.

கட்சியின் அகில இந்திய காங்கிரஸ் நடைபெற்ற பின்னணியில், பல பத்தாண்டுகளாக ஒரு குறிப்பிட்ட அளவிலேயே இருந்த கட்சி உறுப்பினர் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கி இருக்கிறோம். பல மாநில மாநாட்டு அறிக்கைகளின் இலக்காக மட்டுமே இருந்த ஒன்றை நிதர்சனமாக்கி இருக்கிறோம். இவர்களெல்லாம் வேறு கட்சிகளில் இருந்து வந்து நம்மோடு இணைந்தவர்கள் என சிலர் கருதுகிறார்கள். அது தவறு. பெரும்பான்மை புதிய உறுப்பினர்கள் நாம் செய்த வேலைகளின் காரணமாக வந்தவர்கள். இதர கட்சிகளில் இருந்து வந்து இணைந்த தோழர்களும், மாவட்டங்களும் கூட நம்மோடு இணைந்த பிறகு அவர்கள் செய்த வேலைகளின் காரணமாக புதிய உறுப்பினர்கள் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். இப்போது அவர்களை, அந்த புதிய உறுப்பினர் களை கிளைகளில் அமைப்பாக்குவது ஒரு முக்கிய கடமை ஆகும்.

அனைத்துக் கிளைகளும் உடனடியாக கூட்டப்பட வேண்டும். கிளைச் செயலாளர்கள் மற்றும் கிளைத் தலைமைக் குழுக்கள் (கிளைக் கமிட்டிகள்) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அந்தந்த ஊராட்சி மக்களுக்கு, அவர்கள் பிரச்சனைகளுக்கு, போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் அமைப்பாக அவை தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும். வாரம் ஒருமுறை கூட வேண்டும். நாட்டு நடப்புகளைப் பற்றி விவாதிப்பது, நாடு தழுவிய கட்சிப் போராட்டங் களை தெரிந்து கொள்வது, தீப்பொறி பத்திரிகையை படித்து விவாதிப்பது ஆகியவற் றையாவது குறைந்தபட்சம் செய்திட வேண்டும்.

## ஊராட்சி / பகுதி/ உள்ளூர் கமிட்டிகள்

இரண்டுக்கும் மேல் கிளைகள் இருக்கும் பகுதிகளில், ஊராட்சிகளில் ஊராட்சி / பகுதி/ உள்ளூர் கமிட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் 50 உறுப்பினர்கள், 200 வெகுமக்கள் உறுப்பினர்கள் இருக்க வேண்டும் அல்லது சேர்க்கப்பட வேண்டும். குறைந்த பட்சம் 10 தீப்பொறியாவது விநியோகிக்க வேண்டும். ஊராட்சிமட்ட மக்கள் பிரச்சனைகளைப் படிப்பது, பிரச்சனைகள் மீது போராட்டங்களைக் கையிலெடுக்க திட்டமிடுவது, மக்கள் போராட்டங்களுக்கு தலைமை தாங்குவது, போராட்டங்களின் மூலம் எழுந்து வரும் முன்னணிகளை கம்யூனிஸ்டுகளாக்குவது, கட்சி உறுப்பினராக்குவது என்பன அந்த கமிட்டிகளின் கடமையாகும்.

## மக்களிடம் செல்வோம்!

அதே போல, கட்சியின் வெகுமக்கள் அமைப்புகள் அதனை இன்னும் பரந்த தளத்திற்கு, பரந்த வெகுமக்கள் மத்தியில், அவர்களது உடனடி பிரச்சனைகளை சேர்த்துக் கொண்டு செல்வதற்கான அமைப்புகள் ஆகும்.

இவற்றை வலுப்படுத்துவதன் மூலம் தான், சுதந்திரமாக செயல்பட வைப்பதன் மூலம் தான் கட்சி, அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி செல்ல முடியும்.

## அரசியல் பரப்புரை இயக்கத்தின் மூலம் கிளைகள் உள்ளூர் கமிட்டிகளை செயலூக்கப்படுத்துவது

வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித் தாடுகிறது. மோடி அரசாங்கம் வேலைகளை உருவாக்குவதற்குப் பதிலாக வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கான நூறு நாள் வேலைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை மிகக் கடுமையாக குறைத்திருக்கிறது. டிஜிட்டல் வருகைப்பதிவு மூலம் தொழிலாளர்களை சொல்லொனா இன்னலுக்கு ஆளாக்கி இருக்கிறது. நூறு நாள் வேலை என்பது ஆண்டுக்கு ஒரு வார வேலை கூட இல்லை எனும் நிலை உருவாகி இருக்கிறது. கிராமப்புற வேலைவாய்ப்பைக் குறைப்பதன் மூலம், கிராமப்புற தொழிலாளர்கள் நகர்ப்புறத்தை நோக்கிச் செல்ல வேண்டும், அதன் மூலம் நகர்ப்புற முதலாளிகளுக்கு மலிவான உழைப்பு எளிதாக கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதுதான் மோடி அரசின் நோக்கம்.நூறு நாள் வேலத் திட்டக் கூலியை ரூ 500 ஆக உயர்த்துவதாக திமுக தேர்தல் வாக்குறுதி அளித்தது. ஒன்றிய அரசுக்கு கடிதமும் எழுதியது. ஆனால், இன்றுவரை எந்த முன்னேற்றமும் இல்லை. ஒரு நாள் கூலி 600 ஆக கொடுக்க வேண்டும் என்பது நமது கோரிக்கை.

அனைவருக்கும் வேலை, 200 நாள் வேலை, ரூ 600 கூலி, அனைவருக்கும் வீடு, வீட்டு மனை,

சிலிண்டர் விலையை 400 ரூபாய்க்குக் குறைப்பது போன்ற இன்னும் சில கோரிக்கைகளை வலியுறுத்தி, ஒரு பரப்புரை இயக்கத்தை விவசாய மற்றும் கிராமப்புற தொழிலாளர்களை திரட்டும் விதத்தில் அயார்லா மற்றும் சிபிஐஎம்எல் திட்டமிட்டி ருக்கிறது. கட்சிக் கிளைகள் அனைத்தும் அயார்லா கிளைகளோடு இணைந்து இந்த பரப்புரை இயக்கப் பயணத்தை வெற்றியடைய செய்திட வேண்டும்.

அதே போல, நாளொன்றுக்கு ரூ 1000 கூலி, மாதத்திற்கு ரூ 26000 சம்பளம், அனைவருக்கும் இ எஸ் ஐ, பிராவிடண்ட் பண்ட், பணிக் கொடை, ரூ 10000 பென்சன், அனைவருக்கும் தரமான வேலை, வீடு போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு பரப்புரை இயக்கத்தை நகரப் பகுதிகளில் விரைவில் துவக்கிட வேண்டும். தொழிலாளருக்கு எதிரான, கார்ப்பரேட் முதலாளிகளுக்கு ஆதரவான மோடியின் புதிய சட்டத் தொகுப்புகளை ரத்து செய்திட வேண்டும் என்கிற கோரிக்கையும் அதோடு இணைக்கப்பட வேண்டும்.

இந்த பரப்புரை பயணங்களை வெற்றியடைய செய்வது, கட்சிக் கிளைகளைப் புத்துயிர் பெறச் செய்வதன் மூலமும், உள்ளூர் கமிட்டிகளை செயலூக்கப் படுத்துவதன் மூலமும் அடையப்பட வேண்டும். அதை நோக்கி கட்சி அமைப்புகள் பணியாற்றிட வேண்டும்.

**ஒன்றிய / பகுதி மட்ட போராட்டங்கள்**

கட்சி அமைப்புகளை செயலூக்கப்படுத்துவதன் நிறைவாக ஒன்றிய மற்றும் நகர பகுதி மட்டங்களில், மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் போராட்டங்களைக் கட்டமைக்க முயற்சித்திட வேண்டும். இந்தப் போராட்டங்கள் உழைக்கும் மக்களின் நிகழ்ச்சி நிரலை, மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளை, மாநில, அகில இந்திய அரசியலில் முனைப்பாக கொண்டு வரும் திசையில் செயலாற்றிட வேண்டும். கார்ப்பரேட் மயமாக்கத்திற்கு எதிராக உழைக்கும் மக்கள் அரசியலை வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய பிரச்சனையாக மாற்றிடுவது மட்டுமல்ல, மோடியின் காவிப் பாசிச, கார்ப்பரேட் ஆட்சியை, மனுஅநீதி ஆட்சியைத் தூக்கியெறிந்திட சபதம் ஏற்றிட வேண்டும். அத்தகைய ஒரு அரசியல் பார்வையை மையமாக கொண்டுதான் வேர்க்கால் மட்ட கட்சி அமைப்புகளை செயலூக்கப்படுத்தும் கடமையை முன்னெடுத்து இருக்கிறோம்.

11வது காங்கிரஸ் வெற்றிகரமாக நிறைவேறியது, கட்சி முழுவதும் பெருத்த நம்பிக்கை, உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதை, கட்சியை வலுப்படுத்துவது, கட்சிக் கமிட்டிகளின் செயல்தரம் கட்சி வேலை நடையின் தரத்தை மேம்படுத்துவது, ஒட்டுமொத்த கட்சியின் கருத்தியல் அரசியல் மட்டத்தை உயர்த்துவதை நோக்கி வழிப்படுத்திட வேண்டும். கட்சி ஏட்டில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை, பரிசீலனை விரிவாக படிக்கப்பட வேண்டும். ஆவணங்கள் விரைவில் இறுதி செய்யப்படும், அவற்றை முறையான வகையில் படித்திட வேண்டும். கட்சிக் காங்கிரசின் வெற்றிக்கு திறவுகோலானவை பீகாரில் கட்சியின் உள்ளார்ந்த வலுவும் இன்றைய இக்கட்டான கட்டத்தில் நமது (கட்சி) வழியின் முக்கியத்துவமும்தான். நமது கட்சியை வலுப்படுத்தவும் கட்சியின் பாத்திரத்தை உயர்த்திடவும் நமது கட்சி நடைமுறையின் பல்வேறுபட்ட அம்சங்களையும் இயங்கியல் ரீதியில் ஒருங்கிணைத்ததையும் கட்சி முழுவதும் கிரகித்துக் கொண்டாக வேண்டும்:

அதாவது,

(i) கட்சியின் சுதந்திர அறுதியிடலும் வெகுமக்கள் போராட்டங்கள் என்ற வகையிலும் தேர்தல் தலையீடு என்ற வகையிலும் சாத்தியமான பரந்துபட்ட ஒற்றுமை,

(ii) வலுவான வேர்க்கால் மட்ட வேலை, துணிச்சலான அரசியல் முன்முயற்சி, புரட்சிகர அகில இந்திய பார்வை,

(iii) வர்க்கம், வர்க்கப் போராட்ட மய்யத் தன்மையில் உறுதியாக ஊன்றி நிற்கும் அதே வேளை, பல்வேறுபட்ட அடையாளங்கள், தகுதியுள்ள சமூக/ கலாச்சார காரணிகளுக்கும் தீர்வு காண்பது என்பதாகும்,

(iv) விரிவாக ஆழமாகச் செல்லும் வெகுமக்கள் வேலை, கூடவே, சமூக ரீதியாகவும் பூகோள ரீதியான விரிவாக்கம்

(v) கிளர்ச்சி, பிரச்சாரம், கல்வி, அமைப்பாக்குதல் ஆகியவற்றை ஒருங்கிணைந்த வகையிலும் ஒன்றை ஒன்று சார்ந்த திட்டமாக செயல் படுத்துவதும்

(vi) கூட்டாக திட்டமிடல், மேற்பார்வையிடுதல், தனிநபர் பொறுப்புடைமை,

(vii) அமைப்பு விரிவாக்கமும் கருத்தியல்அரசியல் உறுதிப்படுத்தலும்.

**(மத்திய கமிட்டி சுற்றறிக்கையிலிருந்து...)**

*கட்சியின் அனைத்து கமிட்டிகளும் இதனை தலையாய கடமையாக கொண்டு இந்த இயக்கத்தை மாபெரும் வெற்றியடைய செய்திட வேண்டும்.*

**மாநில மாநாட்டு அறைகூவல்!**

*"கட்சியை வெகுமக்கள் அடித்தளம் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சியாக வளர்த்தெடுப்பது என்பது, அடிப்படையில், பரந்த வெகுமக்களைக் கவரும் விதத்திலான நமது அரசியல் முழக்கங்கள், செயல்பாடுகள், செயல்திறன் மிக்க, தாக்கம் ஏற்படுத்தத் தக்க அரசியல் தலையீடுகள், கட்சியின்பால் ஈர்ப்பு கொண்ட பரந்த ஜனநாயக சக்திகளோடு உறவாடல், மக்கள் கோரிக்கைகள், விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் போராட்டங்கள் போன்றவை குறித்ததாகும். அதனை அடைந்திட வேண்டுமானால், பல்லாயிரக் கணக்கான வெகுமக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கு,*

**கிளை/ உள்ளூர் கமிட்டி புனரமைப்பு / அமைப்பு புத்துருவாக்க இயக்கம்:**

ஏப்ரல் 22 அனுபவத்திலிருந்து முறையான பாடங்களை கற்றுக்கொண்டு அந்த உணர்வை முன்னெடுத்துச் செல்ல கிளைகள், உள்ளூர் கமிட்டிகள் போன்ற வேர்க்கால் மட்ட அமைப்புகளை புத்துருவாக்கம் செய்ய விரிந்த பிரச்சார இயக்கத்தை துவங்குவது என அரசியல் தலைமைக் குழு முடிவு செய்தது. மொத்த கட்சி உறுப்பினர்களையும் செயலூக்கமிக்க வகையில் அணி திரட்டிக் கொள்ள நாம் நமது வேலைப் பகுதிகள் அனைத்திலும் கட்சிக் கிளைகளை புதுப்பிக்க / மறு கட்டமைப்பு செய்ய வேண்டும். அதேபோல், ஊராட்சி மட்டத்தில் உள்ளூர் கமிட்டிகளை புதுப்பிக்க / மறு கட்டமைப்பு செய்திடவும் வேண்டும். கட்சியின் ஆழமான வேலைப் பகுதிகளில் ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ளூர் கமிட்டியை உருவாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். கட்சி வேலையின் செல்வாக்கு மெலிந்து விரிந்திருக்கும் பகுதிகளில் உள்ளூர் கமிட்டியானது அருகாமையில் உள்ள இரண்டு மூன்று ஊராட்சிகளை உள்ளடக்கியதாக இருக்கலாம்.

**மே 25 முதல் ஜூலை 28 வரையிலான காலகட்டத்தில் புதுப்பித்தல்/ மறு கட்டமைப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

இயக்கத்தின் முடிவில் ஒவ்வொரு பகுதி/ மாவட்ட கமிட்டியும் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தை பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட மாநிலக் கமிட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும். ஏற்கனவே இருக்கின்ற கிளைகளின் கிளைச் செயலாளரை மறுபடி தேர்ந்தெடுப்பது, தேவைப்படும் இடங்களில் கிளை / தலைமைக் குழுவை மறு கட்டமைப்பு செய்வது, எங்கெல்லாம் முடியுமோ அல்லது தேவையோ அங்கெல்லாம் புதிய கிளைகள் / உள்ளூர் கமிட்டிகளை உருவாக்குதல் என்பதாக இந்த புதுப்பித்தல் / மறு கட்டமைப்பு இயக்கம் இருக்கும். வரும் ஜூலை 28 அன்று எப்போதும் போல் நமது வழக்கமான கிளைக் கூட்டங்களை மீண்டும் நடத்தியாக வேண்டும்.

**பாஜகவை தோற்கடிப்போம் இந்தியாவை பாதுகாப்போம்:**

அமைப்பை புத்துயிர்ப்புபெறச் செய்வதும் முக்கியத்துவம் வாய்ந்த 2024 தேர்தலுக்கு கட்சியையும் மக்களையும் தயார் செய்யும் குறிக்கோளையும் கொண்டு வெகுமக்கள் அரசியல் கருத்துப்பரப்பல், கல்வி , அணி திரட்டும் முயற்சிகள் மேற்கொள்வதும் ஒன்றோடு ஒன்று இணைந்து செல்ல வேண்டும்.

பரந்த எதிர்க்கட்சி ஒற்றுமைக்காக நடந்து வரும் முயற்சிகளை நாம் வரவேற்கிறோம். எதிர்க்கட்சி ஒற்றுமையானது மக்களின் நிகழ்ச்சி நிரலை உள்வயப்படுத்தியதாக இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அது ஒரு அரசியல் மாற்றணிக்கான நாடு தழுவிய இயக்கத்தை துவங்கி மதிப்புமிக்க, வலுவான அடித்தளத்தை எழுப்புவதாக இருப்பதோடு, அந்த திசையில் உந்துதலை தருவதாகவும் இருக்க வேண்டும்.

நம் தரப்பிலிருந்து நம்முடைய கவனம், கீழ்க்கண்ட மக்களின் முக்கிய கரிசனங்கள், உரிமைகள் மீதானதாக இருக்கும். கல்வி, வேலை, அனைத்து விளை பொருள்களுக்கும் அனைத்து விவசாயிகளுக்குமான நியாயமான விலையை உறுதி செய்யும் விவசாய வளர்ச்சி, குடியிருப்பு, சுகாதாரம், சமூக நீதி மற்றும் சமூகப் பாதுகாப்பு, அதுபோல் விலைவாசி உயர்வு, கார்ப்பரேட் கொள்ளை, தனியார்மயம், சாதிய, பாலியல் ஒடுக்குமுறை, மதவெறி வன்முறை ஆகியவற்றுக்கு எதிராக மக்கள் இயக்கத்தை நாம் தீவிரப்படுத்திட வேண்டும். பாசிச தாக்குதலை நாம் முறியடிக்க, பன்மைத்துவத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். ஜனநாயகத்தை விரிவாக்க, கூட்டாட்சி முறையை வலுப்படுத்திட, பேச்சுரிமை மற்றும் மாற்றுக் கருத்துரிமை ஆகியவற்றை நாம் உயர்த்திப்பிடிக்க வேண்டும்.

**(அரசியல் தலைமைக் குழு (பொலிட்பீரோ) கூட்ட சுற்றிக்கையிலிருந்து...)**

பன்முகப்பட்ட வேலை, மாநிலம் முழுவதும், ஒவ்வொரு மாவட்டத் திலும் பல்லாயிரக் கணக்கானோரை அரசியல் ரீதியாக அணிதிரட்டும் பலம், மேலிருந்து கீழ் வரை அரசியல் கருத்தியல் ரீதியில் ஒன்றுபட்ட, செயல்துடிப்பான கட்சி அமைப்பு, அரசியல் மற்றும் நடைமுறை வேலைகளில் திறன் பெற்ற ஊழியர் அணிவரிசை ஆகியன முன்நிபந்தனை ஆகும்.

கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளை தமிழக நிலைமைகளில் சக்திமிக்கவையாக மாற்றிட வேண்டுமானால், மாவட்ட கமிட்டி களை, மாவட்ட வேலைகளை நமது செயல் பாட்டின் மையமாக வளர்த்தெடுப்பதும், குறிப் பிட்ட சில வர்க்க மற்றும் மக்கள் பிரிவுகளை நமது சமூக அடித்தளமாக வளர்த் தெடுப்பதும், அவர்கள் மத்தியில் நமது அரசியல் செல்வாக்கை வளர்ப்பதும் தேவை ஆகும். அதற்கு நமது சொந்த மறு ஆய்வின் அடிப் படையில், ஒரு முழு விரிவான திட்டத்தின் அடிப்படையில், ஆழமாக வேலை செய்வது அவசியம் ஆகும்." என அறைகூவல் விடுத்தது நமது மாநில மாநாடு.

மாவட்ட கட்சி அமைப்புகளை முறைப் படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டிருக்கிறோம். அதனை மேலும் முன்னெ டுத்துச் சென்றிட வேண்டுமானால், நமது கட்சிக் கிளைகளை, உள்ளூர் கமிட்டிகளை புத்துயிர் பெறச் செய்வது அவசியம் ஆகும். அந்த திசையில்தான் "... ஒரு முழுவிரிவான கட்சி வேலை மறுசீரமைப்பு இயக்கத்தை, கட்சி முழுவதையும் அணிதிரட்டிக் கொள்ளக் கூடிய ஒரு இயக்கத்தை, கட்சி வேலைகளை மாற்றிய மைக்கத்தக்க ஒரு இயக்கத்தை, கட்சியை வெகு மக்கள் அடித்தளம் கொண்டதாக, வெகுமக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்கதாக, மாவட்டங் களில் ஆழமான வேலை கொண்டதாக, ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாக வளர்த் தெடுக்கத் தேவையான ஒரு இயக்கத்தை, நாம் முன்னெடுக்க வேண்டிய அவசியம் மிகப்பெரும் சவாலாக முன்வந்திருக்கிறது.

இதுவரை நாம் செய்து கொண்டிருந்தவற்றை முற்றிலும் மாற்றி அமைத்திட நாம் மனரீதியாக தயாராக வேண்டும். புதிய சவால்களை ஏற்றிட முன்வர வேண்டும். நாம் நம்முடைய சிந்தனை முறையை, வேலைநடையை மாற்றிடவில்லை என்றால், மீண்டும் பழைய விதத்திலேயே பயணிப்போமே தவிர மாற்றங்கள் சாத்திய மாகாது. அந்த சவாலை எதிர்கொண்டு, கட்சியை, கட்சி வேலைகளை மறுசீரமைத்திட நாம் முழுமூச்சுடன் இறங்கி செயல்பட சபதம் ஏற்போம்!

## வெகுமக்களிடம் செல்வோம்; வெகுமக்களை வெல்வோம்!
## (ஜுன் 15-30 பரப்புரை இயக்கத்தை நோக்கி....)

கட்சி தோற்றுவிக்கப்பட்ட நாளான ஏப்ரல் 22 அன்று கிளைகள் தோறும் கட்சிக் கொடி ஏற்றுவது, ஏப்ரல் 22 உறுதிமொழி ஏற்பதற்கான அழைப்பை, கட்சி மத்தியக் கமிட்டி விடுத்திருந்தது. கட்சி மாநிலச் செயலாளர், ஆசைத்தம்பி, புதுக்கோட்டை பொறுப்பாளர் பாலசுந்தரம் கலந்துகொண்ட புதுக்கோட்டை மாவட்டக்கமிட்டிக் கூட்டத்தில், ஏப்ரல் 17 அன்று மத்தியக் கமிட்டி அழைப்பை செயல் படுத்துவது குறித்து விரிவாக திட்டமிடப் பட்டது. கட்சி வேலைகள் உள்ள 7 ஒன்றியங் களில் மொத்தம் 57 கிளைகளில் கட்சிக் கொடியேற்றம் உறுதி மொழி ஏற்பது என்று திட்டமிடப்பட்டது.

இந்த "உறுதிமொழி ஏற்பு" நடவடிக்கை பற்றி பின்னர் பரிசீலிக்கப்பட்டது. மொத்தம் 33 கிளைகளில் மட்டுமே உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. இவற்றில், 450 பேர் கலந்து கொண்டனர். அதிலும் உறுதி ஏற்பு நடவடிக்கையை விட, கட்சிக் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகளே தூக்கலாக இருந்தன. குறைவான நாட்களில் செய்யப்பட்டது ஒரு முக்கிய குறைபாடாக உணரப்பட்டது. ஆனாலும் இது கிளைகள் செயல்பாட்டில் உள்ள வலுவற்ற தன்மையைக் காட்டுகிறது என்பதும் உணரப் பட்டது.

இந்தக் குறைபாட்டை சரிசெய்யும் வகையில், கட்சியின் அரசியல் தலைமைக் குழு, மே 25 முதல் ஜுலை 28 வரை கிளைகளை செயலூக்கப்படுத்துவது, உள்ளூர் கமிட்டிகளை புனரமைத்து வலுப்படுத்தும் இயக்கத்தை தொடருமாறு அழைப்பு விடுத்தது. இதன்மூலம்

*கிளைகள் முழுவதையும் செயலுக்கு கொண்டுவருவது உள்ளூர் கமிட்டிகளை வலுப்படுத்துவது என்பதை உறுதி செய்திட வேண்டுமென வழிகாட்டியுள்ளது.*

*மே 25ஜுலை 28 இயக்கத்தை தொடங்கும் விதமாக, மே 26 அன்று கந்தர்வக்கோட்டையில் மாநில ஊழியர் கூட்டம் நடத்தப்பட்டது. ஏறத்தாழ 100 பேர் கலந்து கொண்ட கூட்டத்தில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் சங்கர், மாநிலச் செயலாளர் தோழர் ஆசைத்தம்பி, அவிகிதொச மாநிலத் தலைவர் தோழர் பாலசுந்தரம், மாநிலப் பொதுச்செயலாளர் தோழர் குணசேகரன் உள்ளிட்ட முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டனர். ஜோதி, ஈஸ்வரி, ராஜ சங்கர், கண்ணய்யன், மாசிலாமணி, மல்லிகா ராணி, நாராயணன், முருகேசன் உள்ளிட்ட தோழர்கள் வழிநடத்திய கூட்டத்தில் ஜுன்15-30 ல் பரப்புரை பயணம் நடத்த முடிவு செய்யப்பட்டது.*

*ஜுன் 3 அன்று, மாவட்ட நிலைக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. இக் கூட்டத்தில் மாநில நிலைக் குழு உறுப்பினர் தோழர் சிம்சன் கலந்து கொண்டு பரப்புரை பயணத் திட்டமிடுதலுக்கு வழிகாட்டினார். அதோடு, ஜுன் 9 அன்று முடிவுகள் செயலாக்கம் பற்றி நிலைக்குழு கூடி பரிசீலிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.*

*இந்தப் பின்னணியில், ஜுன் 9 அன்று வீரடிப்பட்டியில் மாவட்ட நிலைக்குழு கூடியது. ஜுன் 3, முடிவுகள் செயலாக்கம் விரிவாக பரிசீலிக்கப்பட்டது. முடிவுகள் முடிவுகளாகவே இருந்தன. செயலுக்கு வரவில்லை என்பது தெளிவாக தெரிந்தது. ஊழியர்களது சொந்த வேலைகள், மழை, மரணம் போன்ற எதிர்பாராத நிகழ்வுகள் அமுலாக்கத்திற்கு தடையாகிவிட்டன என்ற கருத்துகள் முன்வந்தன. இதுபோன்ற தடைகளைத் தாண்டி செயல்படுவதற்காகவே "திட்டமிடுதல்" தேவைப்படுகிறது. "திட்டமிடுதல் செயலுக்கு செல்லவில்லை என்றால், திட்ட மிடுதலும் செயலாக்கமும் "உணர்வுபூர்வமாக" இல்லை என்பது உணரவைக்கப் பட்டது.*

*இதனடிப்படையில், பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன. முதல் தவணையாக 21 தீப்பொறி சந்தா முகவரிகளும் பணம் அனுப்பி வைப்பது (ஜுன்12 அன்று 22 சந்தாக்களும் பணமும் அனுப்பப் பட்டுவிட்டது), 15 ம் தேதி 135 சந்தாக்களை ஒப்படைப்பது, 16 ம் தேதி தீப்பொறி மாவட்ட பொறுப்பாளர் தோழர் பாஸ்கர், தீப்பொறி ஒன்றிய பொறுப்பாளர்கள் கூட்டத்தை கூட்டி தீப்பொறி வருகையை புகாரின்றி உறுதி செய்வது என்று முடிவு செய்யப்பட்டது. ஜுன் 30க்குள் மாவட்ட இலக்கை (610) அடைவது; ஜுன் 15 தேதிக்குள் ஒன்றிய கமிட்டிக் கூட்டங்களை நடத்தி 15-30 திட்டமிடுதலை முடித்துவிட வேண்டும். இதுவரை, கறம்பக்குடி தெற்கு, வடக்கு, ஆலங்குடி ஒன்றிய கூட்டங்கள் முடிந்து விட்டன. கந்தர்வக்கோட்டை உள்ளிட்ட மற்ற ஒன்றிய கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. இவ்வாறு மொத்தம், 63 ஊராட்சிகளில் வேலை செய்வது, 63 ஊராட்சிகளிலும் குறைந்த பட்சம் 63 ஆயிரம் பேரை சந்திப்பது, ரூ 63000 நிதி வசூலிப்பது, 31,500 கையெழுத்துகள் பெறுவது, தீப்பொறி 610 சந்தா சேர்ப்பது, ஒன்றிய அணி திரட்டல்களில் கந்தர்வக்கோட்டை 2000, கறம்பக்குடி 1500, குன்றாண்டார் கோவில் 1000 உள்ளிட்டு ஏழு ஒன்றியங்களில் 5200 பேர் திரட்டுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*மிகமுக்கியமாக, இந்த வேலைத்திட்டத்தை அனைத்து கட்சிக் கிளைகள், உள்ளூர் கமிட்டிகள் மூலம் செய்திட வேண்டும். கட்சி உறுப்பினர்கள், விதொச முன்னணி ஊழியர்கள் உள்ளிட்டு 57 வரை எண்ணிக்கை கொண்ட பல குழுக்களை அமைத்து இந்த வேலைகளை செய்திட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி பரப்புரை இயக்கத்தின் போது, ஊக்கமாக முன் வரும் கட்டுமான தொழிலாளர், மாணவர், இளம் பெண்களை அடையாளம் காணவேண்டும். அந்த பட்டியலை அந்தந்த மாவட்ட பொறுப்பாளரிடம் வழங்கி அமைப்பில் கொண்டுவர உதவிட வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மாவட்டச் செயலாளர் வேலைகள் செய்யப்படுவதை உத்திரவாதம் செய்ய தொடர்ந்து முயற்சித்து வருகிறார்.*

*100 % உறுப்பினர்களை 100% கிளைகளில் கொண்டுவருவது, 100% உள்ளூர் கமிட்டிகளை செயல்படுத்துவதன் மூலம் அதிகபட்ச வெகுமக்களை திரட்டுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*எண்ணிக்கைகளை இயக்கமாக்கிட மாவட்டக் கமிட்டி உறுதி பூண்டுள்ளது. கட்சிக் கிளைகள், உள்ளூர் கமிட்டிகளை செயலூக்கப் படுத்துவது அதன்மூலம் வெகுமக்களிடம் செல்வது வெகுமக்களை வென்றெடுப்பது என்பது மய்யக் கடமையாக உணரப்பட்டது.*

**வீ.மூ.வளத்தான்**

# கல்லறையாக மாறிவரும் ரயில் வண்டிகள்? ரயில் போக்குவரத்தில் பாதுகாப்பினை புறக்கணிக்கும் மோடி அரசின் குற்றச் செயலால் விளைந்த நிகழ்வுதான் பாலசோர் ரயில் விபத்து.

ஒடிசாவின் பத்ரக் மாவட்டத்தைச் சேர்ந்த சுகோ கிராமத்தின் முதியவர் ஒருவர், அங்கு பள்ளி வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான உடல்களுக்கு மத்தியில் நடந்து செல்கிறார். ஒன்றன் பின் ஒன்றாக இறந்த உடல்களின் மீது போர்த்தப்பட்டுள்ள துணியை தூக்கி அவர்களின் முகத்தைப் பார்க்கிறார். யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டதற்கு, "கோரமண்டல் விரைவுவண்டியில் பயணம் செய்த என் மகனைத் தேடுகிறேன். ஆனால் அவனை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை" என்று அழுதுகொண்டிருந்தவர் உடைந்த குரலில் பதிலளித்தார். ஒடிசாவின் பாலசோர் (பாலேஸ்வர்) மாவட்டத்தில் ஜுன் 2 அன்று மாலையில் நிகழ்ந்த ஒரு கோர விபத்தில் சிக்கிய இரண்டு ரயில்களில் பயணித்த தங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களைத் தேடிக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான மக்களின் துயரக் கதைகளில் அவரது கதையும் ஒன்றாகும். ஜுன் 3 ஆம் தேதி காலையில்தான் இந்தியா இந்த துயரத்தின் அளவையும் தீவிரத்தையும் உணரத் தொடங்கியது. கிட்டத்தட்ட 300 பேர் இறந்தனர்; 1000 பேர் காயமடைந்தனர் என்பது தெரிய வந்தது. அடையாளம் காணப்பட்ட இறப்புகளின் பெரும் எண்ணிக்கையைத் தவிர, பயணிகளின் பட்டியலையும் அடையாளம் காணப்படாத இறப்புகளையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். கடுமையான, தீவிரமான காயம்பட்டோரின் எண்ணிக்கையும் மிகமிக அதிகமாகும். எல்லா அறிகுறிகளின்படியும், இன்னும் வெளிவந்து கொண்டிருக்கும் அதிர்ச்சி மற்றும் பேரழிவின் அடிப்படையிலும், பாலசோர் இந்தியாவின் மிக மோசமான ரயில் பேரழிவுகளில் ஒன்றாக நினைவில் கொள்ளப்படும்.

**பெரும்பாலான ரயில்வே உள்கட்டமைப்புகள் உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால் நவீனமயமாக்கலை மேற்கொள்வதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பதிலாக, அரசாங்கம் அதிவேக ரயில்களை இயக்குவதில் தான் பெருவிருப்பம் கொண்டுள்ளது.**

பாலசோர் ரயில் விபத்து போன்ற ஒரு பெரிய பேரழிவை எதிர்கொள்ள இந்தியா என்ன மாதிரியான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்? உடனடி மீட்பு, ரயில் சேவைகள் புனரமைப்பைத் தாண்டி, தவறுக்கு காரணமானவர்களை பொறுப்பாக்குவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதை உத்தரவாதம் செய்வது என்ற கேள்வியும் உள்ளது. மேலும், இதுபோன்ற பேரழிவு மீண்டும் மீண்டும் நிகழாமல் இருக்க, முடிந்தவரை நடவடிக்கை எடுக்கப்படவும் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் மேற்கு வங்கம், ஒடிசா, பீகார், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் இருந்து, கேரளாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் வேலைவாய்ப்பு தேடி புலம்பெயர்ந்து சென்ற தொழிலாளர்கள் ஆவர். தங்களுடைய குடும்பங்கள் பிழைத்திருப்பதற்கு தேவையான உணவை உத்தரவாதம் செய்யப் புறப்பட்டவர்களின் மரணம் அத்தகைய குடும்பங்களை பெரும் இன்னலுக்கு உள்ளாக்கும். எனவே இந்த பெரும் துயரத்திலிருந்து அவர்கள் பிழைத்திருப்பதற்கு தேவையான

நீண்டகால நிதி ஆதரவு வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உள்ளது. பாதிக்கப் பட்டவர்களுக்கான இந்த நிதி ஆதரவை வழங்கு வதற்கு முன்பு, முதலில் அரசு நிச்சயமாக தனக்குள்ள பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும், மோடி அரசாங்கம் இந்த பொறுப்பேற்கும் உணர்வற்ற குணத்திற்கு இழிபெயர் பெற்றது. ஒரு முழுமையான ஆய்வினை மேற்கொள்வது, அடிப்படையான கட்டமைப்புக் காரணிகளை உடனடியாக சரி செய்வதற்குப் பதிலாக, இந்தப் பேரழிவிற்கு நாசவேலை மற்றும் சதிச் செயலே காரணம் என அரசாங்கம் சித்தரிக்க முனைகிறது. ரயில்வே பாதுகாப்பு ஆணையர் தனது அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்பே, விசாரணையை மத்திய புலனாய்வு நிறுவனத்திற்கு மாற்ற ரயில்வே வாரியத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளச் செய்துள்ளது. ரயில் விபத்துக்களை சமாளிக்க, சில ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டு ரயில் விபத்து வழக்குகள் (கான்பூர் 2016, குனேரு 2017) கடுமையான சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்ட விதிகளுடன் தேசிய புலனாய்வு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டன. இந்த விபத்துகளில் எந்த சதியும் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்பட வில்லை.

ரயில்வே விபத்துகளை விசாரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தையும் தேசிய புலனாய்வு முகமையையும் பயன்படுத்துவது, புறக்கணிக்கப் படும் தீர்மானகரமான நிகழ்ச்சி நிரலான ரயில்வே பாதுகாப்பு குறித்து மோடி அரசு தொடர்ந்து ஒப்புக்கொள்ள மறுக்கும் போக்கையே கடைபிடிக்கிறது என்பதையே மிகத் தெளிவாகக் காட்டுகிறது. ரயில்வே பாதுகாப்பு ஆணையர், தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ரயில்வே அதிகாரிகள் உட்பட பல்வேறு அதிகாரிகள் ரயில் வேயில் உள்ள பல பாதுகாப்பு சிக்கல்களைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர். இருப்பினும் இதுபோன்ற எச்சரிக்கைகள் வழக்கமாகவே புறக்கணிக்கப்படுகின்றன. பெரும்பாலான ரயில்வே உள்கட்டமைப்புகள் உடனடியாக மேம்படுத்தப்பட வேண்டிய நிலையில் உள்ளன. ஆனால் நவீனமயமாக்கலை மேற்கொள்வதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பதிலாக, அரசாங்கம் அதிவேக ரயில்களை இயக்குவதில் தான் பெருவிருப்பம் கொண்டுள்ளது. இந்தியா வின் 75 வது சுதந்திர தினத்தை கொண்டாடுவது என்ற பெயரில், மோடி அரசாங்கம் எழுபத்தைந்து வந்தே பாரத் ரயில்களை இயக்குவதற்கான ஒரு பெரிய திட்டத்தை அறிவித்தது. அவை அடிப்படையில் முக்கிய நகரங்களுக்கு இடையே இயக்கப்படும் சதாப்தி விரைவு வண்டிகளின் மறு வடிவமன்றி வேறல்ல. இந்த ஒவ்வொரு ரயிலையும் பிரதமர் மோடி கொடியசைத்து துவக்கி வைக்கிறார். ரயில்வேயால் புதிய ரயில்க ளுக்கான பெட்டிகளை வழங்க முடியாமல் போனதால், குறைந்த பெட்டிகளுடன் கூடிய ரயில்களை இயக்குவதற்கும் கூட அரசாங்கம் தயாராக உள்ளது.

புறக்கணிக்கப்படும் ரயில்வே பாதுகாப்பு, முறையான பராமரிப்பு, நவீனமயமாக்கல் ஆகிய பிரச்சினைகள், ரயில்வேயில் மனிதவளம் தொடர்ந்து குறைந்து வருவதன் காரணமாக அபாயகரமான விகிதாச்சாரத்தை எடுத்துள்ளன. ரயில்வே பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் மிகப்பெரும் வேலைவாய்ப்புகளை வழங்கும் துறையாக இருந்து வருகிறது. ஆனால் சமீப ஆண்டுகளில் 3 லட்சத்திற்கும் அதிகமான காலிப் பணியிடங்கள், தொடர்ந்து ஒழித்துக்கட்டப்படும் பணியிடங்கள் ஆகியவற்றின் காரணமாக, மனிதவளத்தில் அபாயகரமான வீழ்ச்சியை இத்துறை காண்கிறது. காலியாக உள்ள, ஒழித்துக்கட்டப்பட்ட பணியிடங்களில் பாதி யளவு நேரடியாக பாதுகாப்பு சம்பந்தப் பட்டவையாகும். இதன் பாதகமான தாக்கம் தெளிவாக உள்ளது: 2022 டிசம்பரில் நாடாளு மன்றத்தில் தலைமைக் கணக்குத் தணிக்கை யாளரால் தாக்கல் செய்யப்பட்ட செயல்திறன் குறித்த தணிக்கை அறிக்கை, தடம்புரளும் விபத்துகளில் ஆபத்தான அதிகரிப்பை சுட்டிக் காட்டியது. ஒவ்வொரு நான்கு பெரிய தடம்புரளும் விபத்துகளில் மூன்று தடம்புரளும் விபத்துகள் பராமரிப்பும் ஆய்வும் இல்லாதது தொடர்பானவையாகும்.

கவாச் எனப்படும் மோதல் தடுப்பு தொழில் நுட்பத்தை அறிமுகம் செய்வது குறித்து சமீப காலமாக கொண்டாட்டப் பரப்புரைகள் அதிகம் காணப்படுகின்றன. ஆனால் இந்த தொழில் நுட்பம் உண்மையில் இந்தியாவின் கிட்டத்தட்ட 70 ஆயிரம் கிலோமீட்டர் ரயில் பாதையில் 2%க்கும் சிறிதளவு அதிகமான பகுதியை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. தற்போதைய நிதி ஒதுக்கீட்டையும் நடைமுறைப்படுத்தும் வேகத் தையும் கணக்கில் கொண்டால், ரயில் பாதையின் முழு நீளத்திற்கும் இதனை அமுல்படுத்த பல பத்தாண்டுகள் ஆகும். இந்நிலையில், விபத்துக் குள்ளான பாதையின் சம்பந்தப்பட்ட பகுதி கவாச்

சால் பாதுகாக்கப்படவில்லை. மேலும், மின்னணு பின்னிப்பூட்டல் சமிக்ஞை (எலெக்ட்ரானிக் இன்டர்லாக்கிங் சிக்னல் சிஸ்டம்) அமைப்பின் தோல்வியால் ஏற்பட்ட இந்த குறிப்பிட்ட விபத்தை கவாச்சால் தடுத்திருக்க முடியாது என்று கூறுவதிலேயே அரசாங்கம் மும்முரமாக உள்ளது. ஆனால் உண்மை என்னவென்றால், இந்த விஷயத்திலும் கூட, ஒரு குறிப்பான எச்சரிக்கை செய்யப் பட்டுள்ளது. அது நிர்வாகத்தால் கவனிக்கப் படாமல் விடப்பட்டு விட்டது.

பிப்ரவரியில் தென்மேற்கு ரயில்வேயின் ரயில் இயக்கம் சம்பந்தப்பட்ட துறையின் மூத்த அதிகாரி சமர்ப்பித்த குறிப்பில், விழிப்புடன் செயல்பட்ட ரயில் ஓட்டுநர், ரயிலின் மெதுவான வேகம் காரணமாக தென்மேற்கு ரயில்வேயின் மைசூர் மண்டல பிரூர்சிக்ஜாஜூர் பிரிவில் உள்ள ஹோசதுர்கா சாலை ரயில் நிலையத்தில் நிகழ்ந்திருக்கக் கூடிய நேருக்கு நேர் மோதல் தவிர்க்கப்பட்டது. மேலும் அக்குறிப்பு, ஹொசதுர்கா மற்றும் பஹனகா பஜார் ரயில் நிலையங்களின் அமைப்பிற்கு இடையே உள்ள ஒற்றுமையை குறிப்பிட்டு, சமிக்ஞைகளின் அமைப்பை மாற்றியமைக்கவும், வெளிப்ப டையாகத் தெரியும் இடைவெளிகளை, ஆபத்து களை அகற்றவும் உடனடி நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்தியது. இந்த எச்சரிக் கையை ரயில்வே நிர்வாகம் கவனத்தில் எடுத்திருந்தால், பாலசோர் ரயில் விபத்தை ஒரு வேளை தவிர்த்திருக்கலாம்.

உலகில் இப்போது அதிக மக்கள்தொகை கொண்ட நாட்டின் மக்களுடைய பயணத் தேவை களைப் பூர்த்தி செய்யும் பொதுப் போக்குவரத்து அமைப்பாக ரயில்வேயை மேம்படுத்துவதற்கான பாதுகாப்பு பொறியமைவு, பிற அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவதற்குப் பதிலாக, அதற்கு எதிர் திசையில் ரயில்வே தொடர்ந்து மறுசீரமைக்கப்படுவதைக் காணலாம். ரயில்வே பாதுகாப்பு, அதன் அடிப்படை வசதிகளை பாதிக்கும் உள்ளார்ந்த காரணிகளை வழக்கமான பொது ஆய்வுக்கு உட்படுத்த ஒரு வாய்ப்பை வழங்கிய, ரயில்வே நிதிநிலை அறிக்கையை, மோடி அரசு பொறுப்பேற்றவுடன் ஒழித்துக்கட்டி விட்டது. இது திட்டக்கமிஷனை ஒழித்துக்கட்டி, அதனை நிதி ஆயோக் எனப்படும் ஒன்றாக மாற்றியமைப்பது போன்ற நடவடிக்கையாகும். ரயில்வே துறைக்கு மட்டுமே பொறுப்பு வழங்கப்பட்ட முழுநேர கேபினட் அமைச்சர் தற்போது இல்லை. இப்போது இருக்கும் அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவிற்கு ரயில்வே, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பமும் தகவல் தொடர்பும் ஆகிய மூன்று முக்கிய துறைகளின் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தனியார்மயமாக்கம், இலாபம், மக்கள் தொடர்பு ஆகியவையே இப்போது இந்த பொருளாதாரத்தின் முக்கியமான உயிர்நாடியை இயக்குகின்ற முதன்மை விசயங்களாக இருக் கின்றன. மக்களும் மக்களுக்கான சேவையும் என்ற மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய இரண்டு விசயங்கள் பின்னணிக்கு தள்ளப்பட்டுள்ளன. இந்திய மக்களுக்கு பாதுகாப்பான, மலிவான, மக்களுக்கு ஏற்ற போக்குவரத்து வழங்குவதற்குப் பதிலாக, செல்வந்தர்களின் வசதிக்கான போக்குவரத்து அமைப்பாகவே பெரும்பாலும் இரயில்வே சந்தைப்படுத்தப்படுகிறது. இந்த போக்கை மாற்றி, ரயில்வேயை மக்களுக்கானதாக மீட்டெடுக்க வேண்டும். காலி பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

முக்கியப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும், அடிப்படைப் படிப்பினைகளைப் பெறுவதற்கும் பதிலாக, அரசாங்கம் தனது பரப்புரை இயக்கத்தையும், அரசியல் ஆதாயத் தையும் மேம்படுத்துவதற்காக இத்துயர சம்பவத்தை பயன்படுத்துகிறது. மக்கள் படும் அவலங்களில் கவனம் செலுத்துவதற்கும், அரசாங்கத்தை பொறுப்பேற்க வைப்பதற்கும் பதிலாக, இரயில்வே அமைச்சரின் பெயருக்கு களங்கம் ஏற்படாமல் பாதுகாக்கவும் அவரை முன்னிறுத்தவும் ஊடகங்கள் நெருக்கடிக் குள்ளாக்கப்படுகின்றன. பாஜகவின் தேர்ந்தெடுத்த எதிரிகளான சிறுபான்மை முஸ்லீம் சமூகத்தி னரையும் அல்லது அரசியல் எதிர்ப்பாளர் களையும் குறிவைத்து, பாஜகவின் தகவல் தொழில்நுட்ப பிரிவினால் பரப்பப்படும் பொய்க ளாலும் வெறுப்பு நிறைந்த கதையாடல்களாலும் சமூக ஊடகங்கள் நிரம்பி வழிகிறது. ஒரு கொடூரமான சோகத்தினை இப்படி வெட்கக் கேடான, இழிந்த வழியில் ஆயுதமயமாக்கும் முயற்சிகள் தோற்கடிக்கப்பட வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் பொறுப்பாக்கப்பட வேண்டும். பாலசோர் மாதிரியான பேரழிவுகள் மீண்டும் ஏற்படாது என்று மக்களுக்கு உறுதிமொழி கிடைக்கவேண்டும்.

எம்எல் அப்டேட் தலையங்கம் 6–12 ஜூன் 2023

**தமிழாக்கம் – செந்தில்**

# அகில இந்திய கட்டுமானத் தொழிலாளர் சம்மேளனம்

**(இணைப்பு ஏஐசிசிடியு)**

# 4ஆவது அகில இந்திய மாநாடு

2023 ஜூலை 8–9

**தோழர் என். கே. நடராஜன் நகர்**

**தோழர் ஹரி சிங் – ஜாபர் நினைவரங்கம்**

**தோழர் ஓம் பிரகாஷ் சர்மா – தோழர் பொன்ராஜ் நினைவு மேடை**

[புனித பீட்டர் மையம் – சர்ச்]

**சி.எஸ்.ஐ சர்ச் ரோடு**

*கன்னியாகுமரி*

- ◆கௌரவமான ஊதியம், தொடர்ச்சியான வேலை, சமூக பாதுகாப்பு மற்றும் கௌரவமான வாழ்க்கைக்காக போராடுவோம்!
- ◆நலவாரியம் நம்முடையது! அது அரசாங்கம் கொள்ளையடிப்பதற்கான கருவி அல்ல!
- ◆நமது கடினப்பட்ட போராட்டத்தின் விளைவாக பெற்ற நல வாரிய உரிமையை சீர்குலைக்க அனுமதிக்க மாட்டோம்!
- ◆தொழிலாளர் ஈட்டுறுதி, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், விலையில்லா குடியிருப்பு உள்ளிட்ட அனைத்தும் தழுவிய பயன்கள் கொண்ட நலவாரியத்திற்காக போராடுவோம்!
- ◆சமூகப் பாதுகாப்புச் சட்டத் தொகுப்புக்கு எதிராக, தொழிலாளர்களை அடிமையாக்கும் இதர சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக போராடுவோம்!
- ◆வாழ்வாதாரம் மற்றும் உரிமைகள் மீதான தாக்குதலுக்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டத்தை முன்னெடுப்போம்!
- ◆மதவாத வெறுப்பு, கார்ப்பரேட் மேலாதிக்கத்திற்கு எதிராக செந்தொழிலாளர் இயக்கத்தை, அலையலையான போராட்டங்களை கட்டமைப்போம்!
- ◆நமது ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் பலப்படுத்துவோம்!

*2023 ஆம் ஆண்டை தொழிலாளர்களின் அலையலையான போராட்டங்களின் ஆண்டாக மாற்றுவோம்!*

*2024 தேர்தலில் மோடி ஆட்சியை தோற்கடிக்க உறுதியேற்போம்!*

அன்பிற்கினிய நண்பர்களே!

*இந்தியாவின் இரண்டாவது மிகப் பெரிய தொழிலாளர் சக்தியும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10% பங்களிப்பு செலுத்துவதாகவும் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பின் மீது இன்று மோசமான தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. மோடியின் "நல்ல காலம்" என்ற வாக்குறுதி கொடிய நகைச்சுவையாக மாறிவிட்டிருக்கிறது. கட்டுமானத் தொழிலாளர்களின் நீடித்தப் போராட்டம் காரணமாக 1996இல் மத்திய சட்டம் கொண்டுவரப்பட்டு அதன் கீழ் மாநிலங்களில் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், மோடி அரசாங்கம் இந்த மத்திய சட்டத்தை ஒழித்துக் கட்டப் பார்க்கிறது. இதற்கு பதிலாக சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பை கொண்டு வருகிறது. இருக்கின்ற நல வாரியங்கள் மூலம்*

கட்டுமானத் தொழிலாளர்கள் ஒரு கௌரவமான சமூகப் பாதுகாப்பை பெற முடிந்தது. அது இப்போது சமூக பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு மூலம் பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது.

**சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பு தொழிலாளர் களின் உரிமையை பறிப்பதற்கான கருவி.**

கட்டுமானத் தொழிலாளர்களின் உரிமைகளை பறிப்பதற்கான வழியாக சமூக பாதுகாப்புச் சட்டத் தொகுப்பு உள்ளது. அதே நேரம் அது வேலை அளிப்பவரின் கடமைகளை நீர்த்துப்போக செய்து, தொழிலாளர்களை முதலாளிகள் மனம் போன போக்கில் எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்ள அனுமதிக்கிறது.

சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பில் சில சரத்துகளை பார்ப்பது நல்லது.

50 லட்சம் ரூபாய்க்குக் குறைவான மதிப்பு கொண்ட குடியிருப்பு கட்டுமானங்களுக்கு கட்டிடங்கள் மற்றும் இதர கட்டுமான பணிகள் என்ற வரையறையிலிருந்து விலக்கு அளிக்கப் படுகிறது. இதன் மூலம் பெரும் எண்ணிக்கை யிலான தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலா ளர்கள் என்ற பிரிவிலிருந்து வெளியே தூக்கி எறியப்படுவார்கள். அதனால், அவர்களின் சமூகப் பாதுகாப்பு திட்டங்களும் பறிபோகும். அதுபோல, மத்திய அரசின் அனுமதி இல்லாமல் நலவாரிய திட்டங்களோ அல்லது நடவடிக்கை களோ இருக்கக் கூடாது என்கிற படியாக நலவாரிய செயல்பாடு மாற்றி அமைக்கப் படுகிறது.

மேலும், நலவாரியத்தில் உள்ள தொழிலாளர் களின் நலனுக்காக திரட்டப்பட்ட பணத்தை எதில் வேண்டுமானாலும் முதலீடு செய்ய வாரியத்துக்கு அதிகாரம் அளிக்கப் படுகிறது. இது ஊக வணிகத்துக்கு இடம் கொடுக்கும் செயலாகும். செஸ் வரி பிடித்தம் சம்பந்தமாக வேலை அளிப்பவரே சுய மதிப்பீடு செய்யும் முறையை அறிமுகம் செய்தும் செஸ்வரி மற்றும் வட்டி வீதத்தை குறைத்தும் செஸ் வரிக்கான சரத்துக்கள் மிகவும் நீர்த்துப்போக செய்யப் பட்டுள்ளன.

பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் மருத்துவ தேவைகள் சம்பந்தமாகவும் அது போல் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பிட வசதிகள் குறித்தான வேலை அளிப்பவர் பின்பற்ற வேண்டிய கடமைகளும் கூட நீர்த்துப் போக செய்யப்பட்டுள்ளன. கட்டுமான தொழிலாளிக்கு பணியிடத்தில் ஏற்படும் காயங்களுக்கான இழப்பீட்டு உரிமம் மறு வரையறை செய்யப்பட்டுள்ளதால் பெரும் எண்ணிக்கை யிலான தொழிலாளர்களுக்கு பணியிடத்தில் ஏற்படும் காயங்களுக்கான இழப்பீடு கிடைக் காது. மிகை நேரப் பணிக்கு இரட்டிப்பு ஊதியம் என்பதும் நீர்த்துப்போக செய்யப்பட்டுள்ளது.

நிறுவன மயப்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு திட்டம் என்பதற்கு பதிலாக விபத்து மரணத்திற்கு ரூ 2 லட்சம், நிரந்தர ஊனத்திற்கு ரூ 1 லட்சம் மட்டுமே வழங்கும், வேறு எந்தப் பயனும் இல்லாத இ-ஸ்ரம் என்ற மாயை சமூகப் பாதுகாப்பு திட்டத்தை பதிலீடாக முன்வைக் கிறது. மற்ற சமூக பாதுகாப்புக்கு தொழிலாளர்கள் தனியார் காப்பீட்டு நிறுவனங்களை சார்ந்து இருக்கும்படி செய்யப்படுகிறார்கள். உழைக்கும் மக்களுக்கும் ஏழைகளுக்கும் வழங்கும் சமூக பாதுகாப்பு திட்டங்களை இலவசங்கள் என்று தூற்றுகிற மோடி அரசாங்கம், பல லட்சம் கோடிகளை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு மானியமாக வழங்குகிறது.

இன்னொரு பக்கம், நல வாரியங்களில் குவிந்துள்ள பணத்தில் ஒரு சிறு தொகை மட்டுமே தொழிலாளர்களின் நலப் பயன் களுக்காக செலவிடப்படுகிறது. மற்றபடி தொழி லாளர் நலனுக்காக சேமிக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் கொள்ளையடிப்பதற்கான கருவி யாகவே நல வாரியம் உள்ளது

2019 வரை நாடு முழுவதும் உள்ள நல வாரியங்களில் வசூலித்த செஸ் தொகை ரூ.49,688.07 கோடி. அதில் செலவழித்த தொகை ரூ.19,379.922 கோடி மட்டுமே. இதுவல்லாமல் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்ய எண்ணிலடங்காத தடைகள் உருவாக்கப்பட்டி ருக்கின்றன. ஒரு கோடிக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பதிவு செய்யாததால் பலனை அனுபவிக்க முடியாமல் இருக்கிறார்கள்.

அத்தியாவசியப் பொருட்களின் விலை ராக்கெட் வேகத்தில் ஏறும்போது நடை முறையில் தொழிலாளர்களின் ஊதியத்தில் எவ்வித உயர்வும் இல்லை. மாறாக, ஊதியம் குறைவதால் நிராதரவற்ற நிலைக்கு தள்ளப்படு கிறார்கள்.

கட்டுமான தொழிலாளர்களின் பெரும் பிரிவு புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாவிதமான பாகுபாட்டுக்கும் ஆளாவதோடு கடுமையான சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆட்படு

கிறார்கள். மார்ச் 2020இல் மோடி திட்டமிடப் படாத, கொடிய முழு முடக்கத்தைத் திணித்த போது புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நிலைமை வெட்ட வெளிச்சத்திற்கு வந்தது. உணவு, தண்ணீர், போக்குவரத்து வசதி இல்லாமல் பல நூறு கிலோமீட்டர் தூரம் அவர்கள் பயணம் செய்ய நிர்பந்திக்கப்பட்டதால் பலர் வழியிலேயே இறந்து போக நேரிட்டது. முழு முடக்க காலத்தில் மொத்த தொழிலாளர் களில் கால்வாசி தொழிலாளர்கள் அதாவது 1.23 கோடி பேர் மட்டுமே வாரியத்தில் இருந்து உதவி பெற்றார்கள்.

கட்டுமானத் தொழிலாளர்களின் பெரிய பகுதி பெண் தொழிலாளர்களைக் கொண்டது. ஆனால், அவர்கள் பாலியல் துன்புறுத்தலுடன் கூடவே ஊதியத்தில் பாலியல் ரீதியான பாகுபாட்டையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

பெரிய அரசாங்க கட்டுமான திட்டங்களில் கட்டுமான தொழிலாளர்கள் வெளி உலகத்தி லிருந்து துண்டிக்கப்பட்டு சிறைக் கைதிகளை போல வாழும் நிலைக்கு தள்ளப்பட்டிருக் கின்றனர். இதற்கு மிக பளிச்சென தெரியும் உதாரணம் புதிய நாடாளுமன்ற கட்டிடத்தையும் உள்ளடக்கிய சென்ட்ரல் விஸ்டா கட்டுமான பணி ஆகும்.

**போராட்டங்களை தீவிரப்படுத்தி உரிமைகளை மீட்டெடுப்பது தான் முன்னேறிச் செல்வதற்கான ஒரே வழி!**

கட்டுமானத் தொழிலாளர்களின் நீண்ட போராட்டத்தின் விளைவாக மத்திய சட்டமும் நல வாரியமும் கொண்டுவரப்பட்டது.

கட்டுமானத் தொழிலாளர்கள் கௌரவமான /மேலான ஊதியத்துக்காகவும் (குடியிருப்பு, சுத்தமான தண்ணீர், சுகாதாரம், குழந்தைகளின் கல்வி இன்ன பிற உள்ளிட்ட) கௌரவமான வாழ்நிலைக்காகவும் தங்கள் போராட்டத்தை தொடர வேண்டியுள்ளது. எல்லாவற்றையும் விட முக்கியமாக மோடி அரசாங்கம் தட்டிப் பறித்துக் கொண்டிருக்கும் சமூக பாதுகாப்பு மற்றும் இதர உரிமைகளை மீட்டெடுக்க இப்போது போராட்டத்தை தீவிரப்படுத்தியாக வேண்டும். இன்று ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கமும் கடும் தாக்குதலுக்குள்ளாகி இருக்கிறது. 4 தொழிலாளர் சட்ட தொகுப்புகள் மூலம் தொழிலாளர்கள் அடிமை நிலைக்கு தள்ளப் படுகின்றனர். அவர்களின் சங்கம் அமைக்கும் உரிமை, வேலை நிறுத்தம் உள்ளிட்ட போராடும் உரிமை பறிக்கப்படுகிறது. எங்கு பார்த்தாலும் முதலாளிகளின், கார்ப்பரேட் டுகளின் பிடி நெருக்குகிறது. உரிமைகள் பறிக்கப் படும் போது ஏழ்மை, நிரதாரவான நிலை, வேலையின்மை, சமத்துவமின்மை ராக்கெட் வேகத்தில் உயர்கிறது. மோடி ஆட்சி அடிப்படை பிரச்சனைகளிலிருந்து திசை திருப்பவும் போராடும் ஒற்றுமையை குலைக் கவும் மதவாத துருவச் சேர்க்கை என்ற ஆயுதத்தை பயன்படுத்தி தொழிலாளி வர்க்கத்தை பிரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறது.

ஆனால், கர்நாடக மக்கள் சமீபத்தில் நடைபெற்ற கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பாஜகவின் மதவாத திட்டத்தை நிராகரித்து அதை ஆட்சியிலிருந்து அகற்றி வழிகாட்டி யிருக்கிறார்கள்.

சாமானிய மக்களின் அனைத்துப் பிரிவினர் மீதும் தாக்குதல் தொடுக்கப்பட்டிருப்பதால் ஒன்றுபட்ட போராட்டம் காலத்தின் தேவையாக உள்ளது. தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக கட்டுமான தொழிலா ளர்கள் உள்ள போது, இயக்கத்தை பலப்படுத்த கட்டுமான தொழிலாளர்கள் முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. தொழிலாளர்களின் ஒன்றுபட்ட போராட்டத்தாலும் பரந்த மக்களின் ஒற்றுமை யாலும் மட்டுமே இந்தத் தாக்குதலை பின்னுக்குத் தள்ள முடியும்.

வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகளின் போராட்டத்தில் இதை நாம் கண்டுணர்ந்தோம்.

உழைக்கும் மக்கள் மீதான மோடி அரசாங் கத்தின் தாக்குதலை, பிரித்தாளும், ஏமாற்றும் சூழ்ச்சியை நாம் முறியடிப்போம்!

அதற்கு தக்க பதிலடி கொடுத்து தொழிலா ளர்கள் விரோத, மக்கள் விரோத மோடி அரசாங்கத்தை 2024 பொதுத்தேர்தலில் ஆட்சியிலிருந்து அகற்றுவோம்!

ஏஐசிசிடியுவுடன் இணைக்கப்பட்ட அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனத்தின் (AICWF) அகில இந்திய மாநாடு இந்தத் திசைவழியில் இயக்கத்தை முன்னெடுத்துச் சென்று கட்டுமான தொழிலாளர்களின் உரிமை களை மீட்டெடுக்க உறுதியேற்கிறது.

நமது மிகச் சிறந்த சக்தியையும் பங்களிப் பையும் செலுத்தி இந்த மாநாட்டை பெரும் வெற்றியடைய செய்வோம்!

**கோரிக்கைகள்:**

- கட்டுமான தொழிலாளர்களின் கூலி இரண்டு

மடங்காக உயர்த்தப்பட வேண்டும்! பஞ்சப்படியுடன் கூடிய ஓய்வூதியம் ரூ.10,000 வேண்டும்.

- தொழிலாளர் ஈட்டுறுதி, வருங்கால வைப்பு நிதி, ஓய்வூதியம், விலையில்லா குடியிருப்பு, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்தும் தழுவிய சமூக பாதுகாப்புத் திட்டம் வேண்டும்!

- நலவாரியத்தில் தொழிலாளர் நலப் பயன்கள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்! நல வாரியத்தை பலவீனமாக்க, சீர்குலைக்கக் கூடாது!

- தொழிலாளர்களின் நலன்களுக்கு முதன்மை வேலையளிப்பவரையே பொறுப்பாக்கு!

- செஸ் வரியை 3% ஆக உயர்த்தி நல வாரியத்தை பலப்படுத்துவதோடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1% பட்ஜெட் ஒதுக்கீடாக செய்யப்படவும் வேண்டும்!

- தொழிலாளர் நல வாரியங்களில் நேரடியாக தொழிலாளர்களை உறுப்பினராக்குவதோடு கூடவே இணையவழியிலும் உறுப்பினராக சேர்க்க ஏற்பாடு வேண்டும்!

- நலவாரிய உறுப்பினர் சேர்க்கையில் தொழிற் சங்கத்திற்கு இருக்கின்ற உரிமையை பறிக்காதே!

- சமூகப் பாதுகாப்பு சட்டத் தொகுப்பையும் இதர தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகளையும் திரும்ப பெறு!

- எட்டு மணி நேர வேலை நாளை உறுதி செய்! கூடுதல் நேரப் பணிக்கு இரட்டிப்பு ஊதியம் வழங்கு! மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான போனஸ், விடுமுறை, பணிக் கொடை உள்ளிட்ட பயன்களை கொண்டு வா!

- பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் பாலியல் துன்புறுத்தலை நிறுத்த சட்ட விதிகளின் கடுமையான அமலாக்கத்தை உத்தரவாதம் செய்!

- மகப்பேறு விடுமுறை உட்பட பெண் கட்டுமானத் தொழிலாளர்களின் சட்டப்படியான பலன்களை உத்தரவாதம் செய்!

- நலவாரிய குழுக்களில் அனைத்து மைய தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தையும் உத்தரவாதம் செய்!

- நலவாரியத்தை தன்னார்வ தொண்டு நிறுவனமாக மாற்றுவதை நிறுத்து!

- நலவாரிய நிதியைக் கையாள தனியார் நிறுவனங்களை அனுமதிக்காதே!

**அகில இந்திய கட்டுமானத் தொழிலாளர் சம்மேளனம்** (AICWF)
**இணைப்பு: ஏஐசிசிடியு** AICCTU. **தமிழ்நாடு**



**தோழர்**
**என்.கே.நடராஜன்**


*இந்தத் தோழர்களின் கனவை*
*நனவாக்குவோம்!*




**தோழர் ஹரி சிங்**



**தோழர் ஜாபர்**



**தோழர் ஓம் பிரகாஷ்**



**தோழர் பொன்ராஜ்**

# கர்நாடக முதலமைசரைச் சந்தித்து ஏஐசிசிடியு குழு முன்வைத்த தொழிலாளர்களின் கோரிக்கைகள்




கர்நாடக முதலமைச்சர் சித்தராமையாவை ஜூன் 1, 2023 அன்று, ஏஐசிசிடியு அகில இந்திய செயலாளர் தோழர் கிளிஃப்டன் தலைமையில் சந்தித்த ஏஐசிசிடியு பிரதிநிதிகள் குழு முன் வைத்த தொழிலாளர்களின் முக்கிய கோரிக்கை களாவன:

கடந்த டிசம்பர், 2021 முதல் இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தில் உரிமைகளுக்காக போராடிவரும் 80 தொழிலா ளர்கள் மீண்டும் பணிக்கமர்த்தப்பட வேண்டும். இது சம்பந்தமான உயர் நீதிமன்ற உத்தரவு அமல்படுத்தப்பட வேண்டும்.

கர்நாடக மாநிலம் முழுவதும் பணி புரியும் தூய்மைப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். அதுபோல் திடக்கழிவு மேலாண்மை நிர்வாகத்தில் பணி புரியும் வாகன ஓட்டுனர்கள் மற்றும் சுமை தூக்குவோர் நேரடியாக சம்பளம் வழங்கும் நடைமுறைக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

ஆடை தயாரிப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட வேண்டும்

பல்லாரி மாவட்ட சுரங்க தொழிலாளர் களுக்கு புனர்வாழ்வு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். கர்நாடகா முழுவதும் சாலையோர வியாபாரிகளை அப்புறப்படுத்தும் நடவடிக்கை நிறுத்தப்பட வேண்டும். இந்த கோரிக்கைகளை பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக முதலமைச்சர் உறுதி அளித்திருக்கிறார். புதிதாக ஆட்சி பொறுப்பேற்றுள்ள அரசாங்கம், தனது தேர்தல் அறிக்கையில் தொழிலாளர் நலன் பற்றி உத்தரவாதம் அளித்த பல்வேறு விசயங்கள் பற்றியும் முதலமைச்சரின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டது.

கடந்த பாஜக தலைமையிலான ஆட்சி தொழிலாளர்களின் வாழ்க்கையை, வாழ்வா தாரத்தை சூறையாடி சிதைத்திருக்கிறது. மட்டுமல்லாமல் தொழிலாளர் வர்க்க உரிமைகள் மீது தாக்குதலையும் உரிமைகளைப் பறிக்கும் சட்ட திருத்தங்களையும் மேற்கொண்டிருந்தது.

இவற்றுக்கு எதிராக ஏஐசிசிடியு எதிர்ப்பு இயக்கங்களை கட்டமைத்த போது, அப்போது எதிரணியில் இருந்த சித்தராமையாவும் டி.கே. சிவக்குமாரும் தொழிலாளர்களின் போராட்டத் திற்கு ஆதரவளித்ததோடு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப் படும் என்ற உத்தரவாதத்தையும் அளித்திருந்தனர்.

கீழ்க்கண்ட கோரிக்கைகள் கர்நாடக அரசாங்கத்திடம் வைக்கப்பட்டுள்ளன. கர்நாடகா மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளில் நேரடி பண பட்டுவாடா மூலம் ஊதியம் பெறும் தூய்மைப் பணியாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டும். கர்நாடக மாநிலம் முழுவதும் நகர்ப்புற உள்ளாட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் வேலை செய்யும் வாகன ஓட்டுனர்கள், சுமை தூக்குவோர், புதை சாக்கடை பணியில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், சுத்தம் செய்வோர், குழிக்குள் இறங்கி வேலை செய்வோர் (man hole operators) மேற்பார்வையாளர்கள் ஆகிய அனைவரும் நேரடி பணப்பட்டுவாடா முறையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

ஐபி சாலப்பா குழு பரிந்துரை அமலாக்கப் பட வேண்டும்.

2013 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட மூவர் குழுவின் பரிந்துரைகள் அமலாக்கப்பட வேண்டும்.

அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் விலையில்லா வீடு வழங்க வேண்டும்.

தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி முதல் உயர் கல்வி வரை இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

இந்தியன் டெலிபோன் இண்டஸ்ட்ரீஸில் பணி நீக்கம் செய்யப்பட்ட 80 தொழிலாளர்கள் மீண்டும் பணிக்கு அமர்த்தப்பட வேண்டும்.

ஆடை தயாரிப்பு தொழிற்சாலைகளில் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 25000 என அறிவிக்க வேண்டும். தொழிலாளர்களின் கௌரவமான பணி நிலைமைகளுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

2022இல் தொழிற்சாலை சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் திரும்பப் பெறப்பட வேண்டும். பெல்லாரி சுரங்க தொழிலாளர்களின் வாழ்வு புனரமைக்கப்பட்டு அவர்களுக்கு மறு வேலை வாய்ப்பு உத்திரவாதப் படுத்தப்பட வேண்டும்.

அரசாங்க மருத்துவமனை, தனியார் மருத்துவமனைகள் அதுபோல் நூலகங்கள் மற்றும் இதர துறைகளில் காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்பட்டு அந்த தொழிலாளர்கள் நிரந்தரப் படுத்தப்பட வேண்டும்.

வேலையின்மை விகிதம் உயர்ந்து வருவதை தணிக்க நகர்ப்புற வேலை உறுதி சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்திட இப்போதுள்ள 5 ஆண்டுகள் என்பதற்கு பதிலாக 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஊதிய உயர்வு என்று திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

# சாராய வழக்கு – சிறை மரணம் வன்கொடுமைப் படுகொலைகள்

'எனது சாவுக்கு யாரும் காரணம் இல்லை, எனது தந்தை குடிப்பழக்கத்தை நிறுத்திட வேண்டும், எனது தந்தை குடிப்பழக்கத்தை எப்போது நிறுத்துகிறாரோ அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும்' என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு வேலூரைச் சேர்ந்த 16 வயது கொண்ட விஷ்ணுப்பிரியா சில நாட்களுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்டுள்ளார். கள்ளச் சாராயத்தால் பலர் இறந்தபோது அரசே விற்கும் சாராயத்தால் குடும்பம் சீரழிந்து குழந்தைகள் பாதிப்புக்குள்ளாகி, அவர்களே சாவைத் தேடிக் கொள்ளும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. கள்ளச் சாராயத்தால் இறந்த வர்கள் குடும்பத்தினருக்கு ரூபாய் பத்து லட்சம் கொடுத்துவிட்டு, ஸ்பிரிட் விற்ற பொறியாளரைக் கைது செய்த தமிழ்நாடு அரசு விஷ்ணுப் பிரியாவின் மரணத்திற்கு என்ன காரணம் சொல்லப் போகிறது?

அரசாங்கம் டாஸ்மாக் மூலமாக மது விற்கவில்லை என்றால் கள்ளச் சாராயம் தமிழ்நாட்டில் தலைவிரித்தாடும் என்று சாராய விற்பனைக்குக் காரணம் சொன்னார்கள். ஆனால், டாஸ்மாக் மதுவையையும் கூட வாங்கி கள்ளத்தனமாக அதிக விலைக்கு விற்கிறார்கள் என்று வழக்குப் போடுகிறார்கள். டாஸ்மாக் ஊழியர்களை அதிக விலைக்கு விற்கச் சொல்லிவிட்டு பின்னர் அவர்கள் மீதே வழக்கு போடுவதும் நடந்து கொண்டிருக்கின்றது என்று சொல்கிறார்கள்.

இதுபோன்ற வழக்கு ஒன்று தென்காசி மாவட்டம் புளியங்குடி, நடு கருப்பழகுத் தெருவைச் சேர்ந்த 26 வயது இளைஞர், கட்டிடத் தொழிலாளி, பட்டியலின சமுதாயத்தைச் சேர்ந்த தங்கசாமி மீது போடப்பட்டு அவரைச் திருநெல்வேலி பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்து அவர் சிறையில் மர்மமான முறையில் மரணம் அடைந்துள்ளார். அவரைக் கைது செய்த விவரமோ சிறையிலடைத்த விவரமோ குடும்பத்தாருக்குத் தெரியாது. சிறையில் இறந்து போய்விட்டார் என்ற செய்தி வந்த பின்னர்தான் தங்கசாமியின் அம்மாவிற்கும் தம்பிக்கும் தெரியவந்துள்ளது. தங்கசாமியின் தந்தை மாடசாமி ஏற்கனவே இறந்து போய்விட்டார். தங்கசாமியின் தம்பி ஈஸ்வரனும் கூலி வேலைதான் செய்து வருகிறார். தங்கசாமி மீது கடந்த 11.6.2023 அன்று டாஸ்மாக் மதுவை வாங்கி அதிக விலைக்கு கள்ளத்தனமாக விற்றார் என்றும் அவரைப் பிடித்த போலீஸாரிடம் அவரும் இன்னொரு பெண்ணும் தகாராறு செய்து அசிங்கமாகப் பேசி, போலீஸாரைக் கொன்று போடுவோம் என்றும் மிரட்டியதாக புளியங்குடி காவல் நிலையத்தில் குற்ற எண் 211/2023ல் வழக்கு போடப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்படி அவரைக் கைது செய்தது பற்றி குடும்பத்தாருக்கு தெரிவிக்க வில்லை. அவர்களோ தேடிப் பார்த்து விட்டு வெளியூருக்கு சென்ட்டிரிங் வேலைக்குச் சென்றிருக்கலாம் என்று இருந்துள்ளார்கள். 14ம் தேதி மாலை ஊர் நாட்டாமையிடம் தங்கசாமியைப் பற்றிய

விவரத்தைக் கேட்டுவிட்டு அவர் இறந்து போய்விட்டார் என்று சொல்லி யிருக்கிறார்கள். இதைக் கேட்டு புளியங்குடியில் ஊர் மக்கள் மறியலில் ஈடுபட்டுள்ளார்கள். ஊரில் விசாரித்தபோது, தங்கசாமி தன் நண்பனின் இருசக்கர வாகனத்தை போலீஸ் ஸ்டேசனில் பிடித்து வைத்துள்ளார்கள் என்று அதை வாங்கி வருகிறேன் என்று சொல்லிச் சென்றார் என்றும் அதன் பின்னர் வரவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. நண்பன் வாகனத்தைக் கேட்கச் சென்றவர் மீது பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்துள்ளார்கள்.

15.6.2023 அன்று திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பிண வறைக்கு வந்து பார்த்தபோது தங்கசாமியின் உடம்பில் காயங்கள் காணப்பட்டுள்ளன. அதை உறவினர்கள் வீடியோ மற்றும் புகைப்படம் எடுத்துள்ளார்கள். அவர்களின் செல்போனைப் பிடிங்கி, காவல்துறை அதிகாரி சதீஸ்குமார் அதை அழித்துவிட்டுள்ளார். திருநெல்வேலி நீதித்துறை நடுவர் முன்பு உடற்கூராய்வு நடத்தப்பட்டுள்ளது. எப்படியாவது குடும்பத்தினரிடம் பேசி தங்கசாமியின் உடலை பெற்றுக் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொண்டது காவல்துறை. முதலில் இறப்புக்குக் காரணம் காக்கா வலிப்பு என்றனர். பின்னர் மாரடைப்பு என்றனர். கொந்தளிக்கும் குடும்பத்தினரையும் ஊர் மக்களையும் காவல் துறைக்கு கைப் பொம்மை யாகச் செயல்படுபவர்களைக் கொண்டு சமாதா னப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இந்த விவரம் அறிந்தவுடன் இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஜி.ரமேஷ், மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ், இகக(மா) மாவட்டக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் கு.பழனி, மனித உரிமை அமைப் பின் வழக்கறிஞர் மாடசாமி ஆகியோர் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையின் உடற்கூராய்வு பிரிவுக்குச் சென்று உறவினர்கள் மற்றும் ஊர்காரர்களைச் சந்தித்துப் பேசினார்கள். மரணத்தில் சந்தேகம் இருக்கிறது என்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் உத்தரவு (W.M.P.Nos.12224 and 12225 of 2020 amended order dated 28.2.2023)படி உடல் கூராய்வு அறிக்கை மற்றும் வீடியோ பதிவுகள் குடும்பத்தாருக்கு கொடுக்கப்பட்டு அதனை ஆய்வு செய்தபின்னர் தேவை ஏற்படின் மறு உடற் கூராய்வு கோரலாம் என்றும் அதுவரை உடல் பாதுகாப்பாக வைத்திருக்கப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறி, அதனைத் தொடர்ந்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு மார்க்சிஸ்ட் அலுவலகத்தின் நடத்தப்பட்டது.

15.6.2023 மாலை நடைபெற்ற பத்திரிகை யாளர் சந்திப்பில், வழக்கறிஞர்கள் ஜி.ரமேஷ், கு.பழனி, மாடசாமி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி மாநிலக் குழு உறுப்பினர் கே.ஜி.பாஸ்கர், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி நெல்லை மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ், விசிக செய்தித் தொடர்பாளர் முத்துவளவன், தமிழர் உரிமை மீட்புக்களம் அமைப்பாளர் லெனின், திராவிட தமிழர் கட்சி பொதுச் செயலாளர் கதிரவன், இறந்து போன தங்கசாமியின் சகோதரர் ஈஸ்வரன், ஊர் நாட்டாமை அமுதசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மறுநாள் 16.6.2023 அன்று காலை நீதித்துறை நடுவர் அவர்களிடம் உடற்கூராய்வு அறிக்கை மற்றும் வீடியோ பதிவுகள் தரக்கோரியும் உறவினர்கள் எடுத்த வீடியோ அழித்த காவல்துறை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் மனு கொடுக்கப்பட்டது. உடற்கூராய்வு அறிக்கை மற்றும் வீடியோ உயர்நீதிமன்ற உத்தரவுப்படி மருத்துவமனையில் கேட்டபோது, உடற்கூராய்வு அறிக்கை மட்டுமே கொடுத்தார்கள். வீடியோ பதிவை நீதித்துறை நடுவர் கேட்டதாகச் சொல்லி காவல்துறை வாங்கிச் சென்றுள்ளது. ஆனால் அந்த வீடியோ பதிவு நீதித்துறை நடுவர் அவர்களுக்கு 17.3.2023 வரை வந்து சேரவில்லை என்று கூறினார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்தி னருக்கு அந்த வீடியோ பதிவு உடன் கிடைக்க விடாமல் செய்து வருகிறது காவல்துறை.

இந்த நிலையில் வீடியோ கிடைக்கப் பெற்று நிபுணர்கள் கொண்டு ஆய்வு செய்தபின்புதான் தங்கசாமியின் உடலைப் பெறமுடியும். அதுவரை தங்கசாமியின் உடலைப் பாதுகாக்க வேண்டும். மேலும் உடற்கூராய்வு அறிக்கை, தங்கசாமியின் உடலில் காணப்படும் 7 காயங்கள் அவர் இறப்பதற்கு 3 அல்லது 4 நாட்களுக்கு முன் ஏற்பட்டுள்ளது என்று கூறுகிறது. அப்படி யென்றால், அக்காயங்கள் அவரைக் கைது செய்து சிறையில் அடைத்து வைத்திருந்த காலத்தில்தான் ஏற்பட்டுள்ளது. எனவே புளியங்குடி காவல் நிலைய அதிகாரிகள் மற்றும் காவலர்கள் மீதும் பாளை சிறை அதிகாரிகள் மீதும் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொலை வழக்கு பதிவு செய்திட தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அதற்குப் பின்னர்தான் தங்கசாமியின் உடலைப் பெறமுடியும். 17.3.2023 அன்று மாலை




*5 மணிக்கு நெல்லை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் அனைத்து கட்சிகள் சார்பாக மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி மாநில நிலைக்குழு உறுப்பினர் ஜி.ரமேஷ் தலைமையில் பத்திரிகையாளர் சந்திப்பு நடைபெற்றது. அதில் மேற்படி கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டது. தவறும்பட்சத்தில் அடுத்த கட்ட போராட்ட நடவடிக்கைகள் குறித்து பேசி முடிவெடுக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.*

*தமிழ்நாட்டில் குறிப்பாக தென் மாவட்டங் களில் தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தாக்கப்படுவதும் படுகொலை செய்யப் படுவதும் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளது. திருநெல் வேலி மாவட்டம் முக்கூடலில் கோழிக்கடை நடத்தி வந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த ஆறுமுகம் ஆதிக்க சாதியினரால் வெட்டிக் கொல்லப் பட்டார். செங்கோட்டையில் பஞ்சாயத்து அலுவலகத்தில் மேற்பார்வை யாளராகப் பணிபுரிந்த தலித் சமூகத்தைச் சார்ந்த 27 வயது ராஜேஷ் அலுவலக வளாகத்தில் பட்டப்பகலில் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர் களால் வெட்டிக் கொல்லப்பட்டார். அம்பாச முத்திரம் ஏஎஸ்பி பல்வீங் சிங் மற்றும் காவல் அதிகாரிகள் மீது வன் கொடுமை சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டும் அவர்கள் யாரும் கைது இன்னும் கைது செய்யப்படவில்லை. இப்போது புளியங்குடி தங்கசாமியின் காவல் கொட்டடி மரணம். தங்கசாமியை மது விற்றவர் பிரச்ச னையை திசை திருப்புகிறார்கள். யாரையும் அடித்துக் கொல்ல காவல்துறையினருக்கு என்ன உரிமை இருக்கிறது?*

*சமீபத்தில் விழுப்புரம் மாவட்டம் கோலி யனூர் அடுத்த மேல்பாதி கிராமத்தில் தர்ம ராஜா திரவுபதி அம்மன் கோயிலுக்குள் தலித் இளைஞர்கள் கூட்ட நெரிச்சலில் தவறுதலாகச் சென்றதற்காக, அவர்களைத் தாக்கியுள்ளனர் ஆதிக்க சாதியினர். தொடர் பிரச்சினையால் அக்கோயிலுக்கு அறநிலையத்துறை பூட்டு. பட்டியலின மக்களை ஏன் கோயிலுக்குள் விட மறுக்கிறீர்கள் என்று கேள்வி கேட்காத பாஜக சங்கிகள், கோயிலுக்குப் பூட்டு போட்டதற்குக் குதித்துக் கிறார்கள். கோயில் நுழைவுப் போராட்டங்களை 50 ஆண்டுகளுக்கு முன்பே நடத்திய தமிழ் நாட்டிலும் தலித் மக்கள் கோயிலுக்குள் நுழையத் தடை, சாதியாதிக்க வெறிப் படுகொலைகள், காவல் கொட்டடி மரணங்கள், காவல் நிலையச் சித்தரவதைகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. 13.6.2023 இரவு, தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில், பெட்ரோல் இல்லாமல் தன் இரு சக்கர வாகனத்தை தள்ளிக் கொண்டுவந்த விஜய் என்ற கட்டுமானத் தொழிலாளியை, காரணமின்றி கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளார்கள் காவல் துறையினர். அதை வெளியில் சொன்னால் கஞ்சா வழக்குப் போடுவோம் என்று மிரட்டியுள்ளார்கள். காவல் துறையினருக்கு மனித உயிர்கள் மிகவும் மலிவாகப் போய் விட்டது. பொய் வழக்குப் போடுவது, கொடூரமாகச் சித்தரவதை செய்வது எல்லாம் அன்றாட நிகழ்வுகளாகிக் கொண்டிருக்கின்றன. சாத்தான்குளம் தந்தை மகன் மரணம்போல்தான் புளிங்குடி தங்கசாமியின் மரணமும். அவர் உடம்பில் ஏற்பட்ட காயத்திற்குக் காரணம் சொல்ல மறுத்து திசை திருப்புகிறது அரசு நிர்வாகமும் காவல் துறையும். ‘ஜெய்பீம்’ திரைப்படம் பார்த்து விட்டு தனக்கு தூக்கம் வரவில்லை என்று சொன்ன முதல்வர் ஸ்டாலின் ஆட்சியில், நிஜத்தில் அன்றாடம் நடக்கும் காவல் கொட்டடி மரணங்கள் தடுக்கப்படவில்லை என்பது மட்டுமின்றி, குற்றவாளிகளான காவல் துறையினர் காப்பாற்றப்படுகிறார்கள் என்பதுதான் அதிர்ச்சியளிக்கும் விசயம்.*

**– சங்கரந்தம்பி**

## வீடு திரும்பாப் போராட்டம்

*15.06.2023 அன்று வேலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு சிபிஐஎம்எல் கட்சி சார்பாக வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட திருமலைக்கோயில் விஸ்வநாதன் நகர், அவுசிங்போர்டு, அண்ணா நகர், சரஸ்வதி நகர் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கோரி வீடு திரும்பா போராட்டம் சிபிஐஎம்எல் மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சரோஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் குழு உறுப்பினர்கள் மாணிக்கம், ஏழுமலை, கி.சிம்புதேவன் முன்னிலை வகித்தனர். சிபிஐஎம்எல் மாநிலக்கமிட்டி உறுப்பினர் தோழர் சொ.இரணியப்பன் சிறப்புரையாற்றினார். வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கைகை எடுத்துள்ளதாக வட்டாட்சியர் கடிதம் கொடுத்த அடிப்படையில் மக்கள் வீடு திரும்பினர்.*

## கையெழுத்துப் பிரச்சார இயக்கம்

*“மோடி ஆட்சியை வெளியேற்றுவோம், தேசிய ஊரக வேலை திட்டத்தை பாதுகாப்போம்” என்ற முழக்கத்தோடு, தேசிய ஊரக வேலை திட்டத்தில் டிஜிட்டல் வருகை பதிவேட்டை ரத்து செய்ய வேண்டும், திட்டத்தை பேருராட்சி பகுதியில் விரிவுபடுத்த வேண்டும், ஆண்டுக்கு 200 நாள் வேலை நாள் ஒன்றுக்கு ரூ600 கூலி வழங்க வேண்டும், வீட்டுமனை இல்லாத கிராமபுறத் தொழிலாளர்கள் , வறிய விவசாயிகள் குடும்பங்களுக்கு வீட்டுமனை, வீடு பெறுவதை அடிப்படை உரிமையாக்கி சட்டம் இயற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்திந்திய விவசாய கிராமபுறத் தொழிலாளர்கள் சங்கம் (AlARLA) சார்பாக மாநிலம் தழுவிய இயக்கம் நடைபெற்று வருகின்றது. அதன் ஒரு பகுதியாக திருச்சி மணப்பாறை ஒன்றியம் சமுத்திரத்தில் 18.6.2023 அன்று கையெழுத்து இயக்கம் சிபிஐஎம்எல் மாவட்டகுழு உறுப்பினர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்றது. கையெழுத்து இயக்கத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) நகரச் செயலாளர் பாலு தொடங்கி வைத்தார். நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மணிகண்டன், செந்தட்டி, சரவணன், அழகர், ரமேஷ், காளியம்மாள், மங்கையகரசி, மாரியம்மாள் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை, புதுப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் விவசாயத் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கண்ட கோரிக்கைகளுக்காக கையெழுத்துப் பிரச்சார இயக்கம் நடைபெற்றது.*

## கட்டுமானத் தொழிலாளர்கள் கூட்டம்

*புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் காட்டுநாவல் ஊராட்சி கட்டுமான தொழிலாளர்கள் தமிழ்நாடு ஜனநாயக கட்டுமான தொழிலாளர் சங்கத்தில் மாவட்டத் தலைவர் தோழர் சிவராஜ் தலைமையில் சிபிஐஎம்எல் மாவட்டச் செயலாளர் தோழர் வளத்தான், மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் முன்னிலையில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். 102 தொழிலாளர்கள் 4 கிளைகளாக அமைக்கப்பட்டு கிளைச் செயலாளர்களாக பெரியார் நகர் சு.ஜயா, எம்ஜிஆர் நகர் சு.கலாவதி, எம்ஜிஆர் நகர் போதும்பொண்ணு, ஏ.டி.காலனி மணிமேகலை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர் கன்னியாகுமரியில் நடைபெற உள்ள கட்டுமானத் தொழிலாளர் சம்மேளன மாநில மற்றும் அகில இந்திய மாநாடுகளை வெற்றிபெறச் செய்ய முடிவு செய்யப்பட்டது.*



அகில இந்திய மாணவர் கழகம்–புரட்சிகர இளைஞர் கழகம் நடத்திய

# மாணவர் - இளைஞர் பயிற்சி முகாம்




அகில இந்திய மாணவர் கழகம் மற்றும் புரட்சிகர இளைஞர் கழகம் சார்பாக 2023 ஜுன் 6–7 தேதிகளில் மாணவர் -இளைஞர் பயிற்சி முகாமும் சிறப்பு மாநாடும் விருத்தாசலத்தில் நடைபெற்றது. இரண்டு நாட்கள் நிகழ்ச்சிக்கும் புரட்சிகர இளைஞர் கழகத்தின் மாநிலத் தலைவர் தோழர் மா.சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். அகில இந்திய மாணவர் கழகத்தின் மாநிலச் செயலாளர் தோழர் பாலஅமுதன் முன்னிலை வகித்தார். இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி பயிற்சி முகாமைத் துவக்கி வைத்து உரையாற்றினார். அகில இந்திய மாணவர் கழகத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் பிரசஞ்சீத்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். குடியாத்தம் மேனாள் கல்லூரி முதல்வர், கல்வியாளர் பேராசிரியர் சிவக்குமார் தற்போது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள புதிய கல்விக் கொள்கை பற்றியும் தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டிய தனித்துவமான கல்விக் கொள்கை பற்றியும் கருத்துரை வழங்கினார். இகக(மாலெ) மத்தியக்குழு உறுப்பினர் தோழர் பாலசுந்தரம், புரட்சிகர இளைஞர் கழகத்தின் மாநிலத் தலைவர் தோழர் தனவேல் கருத்துவரை வழங்கினார்கள். இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர் நிறைவுரையாற்றினார். இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் தோழர் மதிவாணன் கலந்து கொண்டார். மாநிலம் முழுவதிலிருந்தும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

◆ ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்துள்ள புதிய தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெற வேண்டும்

◆ கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வர வேண்டும்

◆ மத்திய, மாநில அரசுத் துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



தூத்துக்குடியில் கோரிக்கைகள் மீது கன்டெய்னர் லாரித் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்




மோடி அரசுக்கு எதிராக நெல்லையில் ஆர்ப்பாட்டம்

## அமைச்சர் செந்தில் பாலாஜி கைது என்பது எதிர்க் கட்சிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்; மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி கடும் கண்டனம்!

கைது என்ற பெயரில் ஒன்றிய மோடி பிஜேபி அரசு நடத்தும் ஜனநாயகப் படுகொலையை, கூட்டாட்சி தத்துவத்தை குழிதோண்டிப் புதைப்பதை, சிபிஐஎம்எல் கண்டிக்கிறது!

தமிழ்நாட்டில் பாஜக தனது தேர்தல் தயாரிப்பை அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்து தொடங்கியிருக்கிறது. செந்தில் பாலாஜியின் நடவடிக்கைகள் குறித்த சிபிஐ எம்எல் கட்சியின் விமர்சனங்கள் என்பது தனி விசயம். ஊழல் நடவடிக்கைகளுக்காக சட்டப்படி நடவடிக்கை எடுப்பதில் யாருக்கும் மாறுபாடு இருக்கமுடியாது. ஆனால், அது பாஜகவின் சதித் திட்டத்தின் ஒரு பகுதியாக வரும்போது, சட்டமன்ற அலுவலகத்தையே அனுமதியின்றி ரெய்டு செய்யும்போது அது கூட்டாட்சி முறைக்கு எதிரானது ஆகும்.

அமித்ஷாவின் வருகை மக்கள் மத்தியில் எவ்விதமான செல்வாக்கையும் ஏற்படுத்த தவறிவிட்டது. இதனால் விரக்தி அடைந்துள்ள அமித்ஷாவும் அண்ணாமலையும் அமைச்சர் செந்தில் பாலாஜி அலுவலகம், வீடுகளில் சோதனை செய்ததோடு நிறுத்தாமல் நள்ளிரவில் கைதும் செய்திருக்கிறது. இதன்மூலம் கோவை மண்டலத்தில் சரிந்துபோன பாஜக செல்வாக்கை தூக்கி நிறுத்தி விடலாம் என்று கனவு காண்கிறது. பாஜக குறிவைக்கும் ஒவ்வொரு தொகுதிக்கும் இப்படி ஒரு சர்வாதிகார செயலை அரங்கேற்ற திட்டமிட்டுள்ளது என்பதும் தெரிகிறது. மக்களை பிளவு படுத்தும் அரசியலைக் கொண்ட பாஜக, கட்சிகளை பிளப்பது, விழுங்குவது, தலைவர்களை அச்சுறுத்துவது, விலைக்கு வாங்குவது என்னும் அரசியல் மூலம் வெற்றி பெற நினைக்கிறது. திமுக மட்டுமின்றி இந்தியா முழுவதுமுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளுக்கு ஒரு அச்சுறுத்தலாகவும் பாஜக காட்ட விரும்புகிறது.

பற்றி எரிந்து கொண்டிருக்கும் மணிப்பூரில் அமைதியைக் கொண்டுவர துரும்பையும் எடுத்துப் போடாத மோடி ஆட்சி, மத்தியப் படைகளை வைத்துக் கொண்டு தமிழ்நாடு தலைமைச் செயலகத்திலேயே அதிரடி சோதனை நடத்தியிருப்பது ஜனநாயகத்துக்கும் கூட்டாட்சி முறைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது தமிழ்நாட்டில் பாஜகவின் அப்பட்டமான அரசியல் தோல்வியையே காட்டுகிறது.

பாசிச நடவடிக்கைகள் மூலம் வெற்றி பெற்றுவிடலாம் என்று கனவு காணும் பாஜக வுக்கு தமிழ்நாட்டை கல்லறையாக மாற்றிட முன்வர வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) தமிழ்நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது. தமிழ்நாட்டிலிருந்து செங்கோல் பெற்றுக் கொண்டதாக மார் தட்டும் பாஜக, தமிழ்நாட்டு மக்கள் மீது கொடுங்கோலை ஏவி உள்ளது. பாஜகவின் இந்த கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கட்சி தனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

**பழ.ஆசைத்தம்பி**
**இகக(மாலெ) மாநிலச் செயலாளர்**


**தமிழ்நாடு ஜனநாயக கட்டுமானத் தொழிலாளர் சங்கம்**
**(AICWF – AICCTU)**

வரவேற்புரை :
தோழர். கார்மல் AICWF

தலைமை :
தோழர். அந்தோணி முத்து AICWF


முன்னிலை: தோழர்கள் - சுசீலா, பிலோமினா, அ ஆபிரகாம், கே ராஜன், எஸ் சிவராஜ், கே நடராஜன், என் வெங்கடேசன், வேல்முருகன், சவுந்தர் ராஜன், இளையராஜா

துவக்கவுரை :
தோழர். எஸ். கே. சர்மா
அகில இந்திய பொதுச் செயலாளர் AICWF

நிறைவுரை :
தோழர்.சங்கர் வீ
தலைவர் AICCTU

சிறப்பு விருந்தினர் :
தோழர். வீரேந்திர குப்தா,சி பி ஐ எம் எல் பீகார் - எம் எல் ஏ
தோழர். பழ. ஆசைத் தம்பி மாநிலச் செயலாளர் சிபிஐ எம் எல்

அறிக்கை முன்வைப்பு :
தோழர். சொ. இரணியப்பன்
மாநில பொதுச் செயலாளர் AICWF



கருத்துரை :
தோழர். சோ. பால சுப்பிரமணியன் தலைவர், AICWF
தோழர். கே. கோவிந்தராஜ் மாநிலத் தலைவர், AICWF
தோழர். டி . சங்கர பாண்டியன் மாநிலத் தலைவர், AICCTU
தோழர். க. ஞானதேசிகன் மாநில பொதுச் செயலாளர், AICCTU
தோழர். க. பாலசுப்பிரமணியன் மாநிலச் செயலாளர், AICCTU

**உன்னத கூலிக்காக**
**நிரந்தர வேலைக்காக**
**சமூகப் பாதுகாப்புக்காக**
**கவுரவமான வாழ்க்கைக்காகப் போராடுவோம்!**

**தொழிலாளர் உரிமைகளை மீட்டெடுக்கப் போராடுவோம்!**

**மக்கள் விரோத மோடி–பாஜக ஆட்சியைத் தோற்கடிப்போம்!**

AICWF - AICCTU

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.06.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

## அகில இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனம்

**(AICWF – AICCTU)**

# 4 வது அகில இந்திய மாநாடு

## 8 – 9 ஜூலை 2023

## கன்னியாகுமரி

**வரவேற்புரை :**
தோழர் சுசீலா AICWF

**தலைமை :**
சோ. பாலசுப்பிரமணியன், தலைவர்,AICWF

**நெறியாளர் :**
தோழர் எஸ்.கே. சர்மா
பொதுச் செயலாளர், AICWF

**துவக்கவுரை :**
தோழர் சங்கர் வீ
தலைவர், AICCTU

**சிறப்புரை :**
தோழர் ராஜீவ் டிம்ரி
பொதுச் செயலாளர், AICCTU

**சிறப்பு விருந்தினர் :**
தோழர் வீரேந்திர குப்தாசி பி ஐ எம் எல் பீகார் - எம் எல் ஏ பழ ஆசைத் தம்பிமாநில செயலாளர் சிபிஐ எம் எல்

**கருத்துரை :**

தோழர் பொன். குமார் தலைவர் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியம் தமிழ்நாடு அரசு

தோழர் D. குமார் மாநில பொதுச் செயலாளர் இந்திய கட்டுமான தொழிலாளர் சம்மேளனம் [CWFI - CITU]

தோழர் N. செல்வராஜ் மாநில பொதுச் செயலாளர் தமிழ்நாடு ஏ ஐ டி யூ சி கட்டட தொழிலாளர் சங்கம்அம்பத்தூர்

தோழர் க. பேரறிவாளன் மாநில பேரவை அமைப்பாளர் தொழிலாளர் விடுதலை முன்னணிதமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய உறுப்பினர்

தோழர் டி சங்கர பாண்டியன் மாநிலத் தலைவர் AICCTU

தோழர் க.ஞானதேசிகன் மாநில பொதுச் செயலாளர் AICCTU

தோழர் சொ. இரணியப்பன் மாநில பொதுச் செயலாளர் AICWF

தோழர் கொ. கோவிந்தராஜ் மாநிலத் தலைவர் AICWF

தோழர் கே பால சுப்பிரமணியன் மாநில செயலாளர் AICCTU

தோழர் எஸ். எம். அந்தோணி முத்து மாநில துணைத் தலைவர் AICCTU

# AICWF – AICCTU

## தமிழ்நாடு ஜனநாயக கட்டுமானத் தொழிலாளர் சங்கம்

# 4 வது மாநில மாநாடு

## 7 ஜூலை 2023

## கன்னியாகுமரி

**மோடியின் தொழிலாளர் விரோத சமூக பாதுகாப்பு சட்டத் தொகுப்பை வீழ்த்துவோம்!**

தொழிலாளர் ஈட்டுறுதி, வருங்கால வைப்பு நிதி, பணிக் கொடை, ஓய்வூதியம், விலையில்லா குடியிருப்பு , கௌரவமான ஊதியம், நிரந்தர வேலை, விபத்தில்லா வேலை பாதுகாப்பு கோரி போராடுவோம்!

**கட்டுமானத் தொழிலாளர் இயக்கத்தை, நலவாரிய சங்கமாக அல்லாமல், போராட்ட இயக்கமாக மாற்றுவோம் !**

Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh